# வானவில்

VAANAVIL
ISSUE – 35 NOVEMBER 2013

இதழ் - 35 கார்த்திகை 2013


# திசை மாறிச் செல்லும் வட மாகாணசபையும், தமிழ் முற்போக்கு – ஜனநாயக சக்திகளின் கடமையும்!

மூன்று மாதங்களுக்கு முன்னர் செப்ரெம்பரில் வடக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடைபெற்ற பொழுது, வடக்கில் வாழும் 'தமிழ்ப் பெருங்குடி மக்கள்' தமிழ் தேசிய தேசியக் கூட்டமைப்புக்கு அமோக (சுமார் 80 வீதம்வரை) ஆதரவளித்து அதை வெற்றிபெற வைத்தனர். அத்துடன் அதன் முதலமைச்சர் வேட்பாளரான முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு சுமார் 1,33,000 வரையிலான விருப்பு வாக்குகளையும் அளித்து, அவரை ஒரு முடிசூடா மன்னன் ஆக்கினர். அத்துடன் அவர்களது வழமைப் பிரகாரம், தமது கடமை முடிந்தது எனக் கருதி, தமது தனிப்பட்ட அலுவல்களைப் பார்க்கச் சென்றுவிட்டனர்.




மக்கள் இவ்வளவு நம்பிக்கையுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவு செய்ததற்குக் காரணம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே தமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு அமைப்பு என்று கருதியதனால் ஆகும். அவர்கள் அவ்வாறு கருதியதற்குக் காரணம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு மோசமான இனவாத, வலதுசாரி அமைப்பாக இருந்த போதிலும், அதற்கு மாற்றாக எந்தவொரு தமிழ் அரசியல் அமைப்பும் இல்லாமல் இருந்தமையினாலாகும்.

தென்னிலங்கையில் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என, ஆட்சிக்கு வரக்கூடிய இரண்டு கட்சி முறைமை இருக்கின்றது. அவற்றைவிட இடதுசாரிக் கட்சிகளும் இருக்கின்றன. தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான ஒருநிலை இல்லை.

இனவாத யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் தமிழ் மக்கள் மத்தியிலும் இரண்டு கட்சி முறை இருந்தது. தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி என்பன பிரதான கட்சிகளாக இருந்தன. அவை கீரியும் பாம்பும் போல (கொள்கையில் அல்ல, தனிமனித வித்துவக் காய்ச்சலில்) செயற்பட்டும் வந்தன. அவற்றைவிட இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பனவும் ஓரளவு செல்வாக்குப் பெற்று இருந்தன. ஆனால் தென்னிலங்கையிலுள்ள பிரதான கட்சிகளுக்கிடையில் இருப்பது போன்ற ஆழமான கொள்கை முரண்பாடுகள் இரண்டு பிரதான தமிழ் கட்சிகளுக்கிடையிலும் இருக்காததால், அவை இரண்டும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற ஒரே அமைப்பாகி, தனிநாடு பிரிவினைக் கோரிக்கையையும் முன்வைத்தன.

இந்த இணைப்பின் மூலம் தமிழ் மக்களின் அரசியலில் ஒற்றைப் பரிமாண நிலை ஏற்பட்டதுடன், பிரிவினைவாதக் கோரிக்கை காரணமாக, இன முரண்பாடுகளுக்கு அப்பால் வர்க்க அடிப்படையிலான ஒற்றுமையை வலியுறுத்தி வந்த இடதுசாரிக் கட்சிகளும் தமிழ் மக்களிடமிருந்து ஓரம்கட்டப்பட்டன. அதன் காரணமாக தமிழ் பிற்போக்கு சக்திகளின் தலைமைத்துவம்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# தமிழர் வாக்குகள்தான் இலக்கு

இலங்கை தமிழர்சார் அரசியலில் பலவித பரபரப்புகளின் மத்தியில் ஒருவாறாக பொதுநலவாய நாடுகளின் 22வது மாநாடு இலங்கையில் நடந்து முடிந்துள்ளது. இந்தியா, கனடா மற்றும் மொரிசியஸ் போன்ற நாடுகளின் பிரதமர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளாததினால் (ஆனால் இந்த நாடுகள் மாநாட்டினை பகிஸ்கரிக்கவில்லை என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்) அதனை வெற்றியாக கொண்டாடும் ஒரு சாராரும், மாநாட்டினை பகிஸ்கரிக்க வேண்டுமென்ற கூச்சல்களின் மத்தியில் மாநாட்டினை ஏதோ நடாத்தி முடித்துவிட்டோம் என்ற திருப்தியில் இலங்கை அரசும் உள்ளனர்.

புலம்பெயர் புலித்தமிழர்களின் எதிர்ப்புகளின் மத்தியில் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொண்ட பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமருன், இலங்கை அரசை எச்சரிக்கும் வகையில் விடுத்த அறிக்கையொன்று மாநாட்டின் கிளைமாக்ஸாக அமைந்திருந்தது. 2009 ஆண்டு நடந்து முடிந்த யுத்தத்தில் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களை இலங்கை அரசு விசாரிக்க வேண்டும், இல்லாவிடின் 2014 ஆண்டு மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கவுன்சில் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள இலங்கை தொடர்பான விவாதத்தில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை பிரித்தானியா முன்தள்ளுமென டேவிட் கமருன் கூறியுள்ளார்.

பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமருன் இலங்கையில் வைத்து விடுத்த அறிக்கையும் இந்தியாவினதும் கனடாவினதும் பிரதமர்கள் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளாமல் விட்டதும் ஒரே நோக்கத்தினைக் கொண்டன என்பது இந்த மூன்று நாடுகளின் உள்நாட்டு அரசியல் நிலைமைகளை அவதானிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். அதாவது மாநாட்டினை பகிஸ்கரிக்கக் கோரும் உள்நாட்டு தீவிரவாத தமிழர் குரல்களுக்கு கொஞ்சம் பால் வார்த்து, தமிழர் வாக்குகளை தம்பக்கம் தக்க வைத்துக் கொள்வதே, இந்த மூன்று நாடுகளினதும் தற்போதைய ஆளுங்கட்சிகளின் நோக்கம்.

குறிப்பாக 2014 ஆண்டில் 543 ஆசனங்களுக்கான இந்தியாவில் நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில், 39 தமிழ்நாட்டு ஆசனங்களில் ஒரு பகுதி தற்போதைய ஆளுங்கட்சியான காங்கிரசுக்கு மிகவும் அவசியமாக தேவைப்படுகின்றது. மாநாட்டினை இந்தியா பகிஸ்கரிக்க வேண்டுமெனக் கோரி தமிழ்நாட்டு வாக்காளர்களை தம்வசப்படுத்தலாமென நினைத்து தமிழக அரசியல் கட்சிகள் போட்டிபோட்டுக் கூக்குரலிடுகின்றன. பிரதமர் மாநாட்டில் கலந்துகொள்ளாமல் விடுவதின் மூலம் தமிழக வாக்காளர்களையும் தமிழக கட்சிகளையும் ஆசுவாசப்படுத்தலாம் என்பதே காங்கிரஸ் கட்சியின் நோக்கமாக இருந்தது. மேலும் இந்திய மத்திய அரசில் கூட்டாட்சி மூலமே அரசமைக்கலாம் என்பதால், தமிழக அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளை செவிமடுக்க வேண்டிய நிலையிலும் காங்கிரஸ் கட்சி உள்ளது.

ஆனால் இந்தியாவின் வெளிநாட்டு அமைச்சர் இந்திய பிரதமர் மாநாட்டில் கலந்துகொள்ளாமல் விட்டது கவலையளிப்பதாக உள்ளதென இலங்கையில் வைத்து தெரிவித்த கருத்தானது, மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்துகொள்ளாமல் விட்டது தொடர்பான கருத்து வேறுபாடுகள் காங்கிரஸ் கட்சிக்குள் நிலவியிருந்ததைக் கோடிட்டு காட்டியுள்ளது. மேலும் டேவிட் கமருன் கொழும்புவரை சென்றதோடு நின்றுவிடாமல், யாழ்ப்பாணம் போய், இலங்கையில் வைத்தே அதிரடி அறிக்கைவிட்டு 'ஸ்ரண்ட்' அடித்ததைப் பார்த்த இந்திய பிரதமருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் தாமும் அப்படி ஏதாலது செய்திருந்தால்.... என்ற எண்ணம் தோன்றியிருப்பதை பொதுநலவாய மாநாடு முடிந்த பின்னரான நிலவரங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இங்கிலாந்திலும் கனடாவிலும் புலம்பெயர் தமிழர்களின் வாக்குகள் ஆளுங்கட்சியொன்றினை தெரிவு செய்யும் அளவிற்கு தீர்மானகரமாக இல்லாவிடினும் 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதுபோல பல கட்சிகளுக்கு வாக்குகள் பிரியும்போது 'எமது இனத்திற்காக குரல் கொடுத்தவர்' என்ற உணர்ச்சி பிரவாகத்தில் புலம்பெயர் தமிழர்கள் அளிக்கும் வாக்குகள் ஆளுங்கட்சியாக தெரிவாகக்கூடிய கட்சியொன்றின் ஆசனங்களை வலுப்படுத்த உதவலாமென்ற புள்ளிவிபர மதிப்பீடுகளின் அடிப்படையிலே இவ்விரு நாடுகளின் அரசியல் இலங்கை தமிழர்பால் திரும்பியுள்ளது.

இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் இடையிலான பிணக்கே, 1983களில் இலங்கை தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிப்பதில் முடிந்தது. ஆனால் அப்போது இலங்கையை பிளந்து தமிழர் இராச்சியம் அமைக்கவே இந்தியா ஆயுதப்பயிற்சி தருவதாகவே தமிழர்கள் நம்பினார்கள். இந்தியாவிற்கு இலங்கை தமிழர்கள்மீது உண்மையான கரிசனை இருக்கவில்லை என்பது தெளிவாக புலப்பட ஒரு சில ஆண்டுகள் தேவைப்பட்டன. அதேபோல இலங்கை அரசை எச்சரித்து அறிக்கை விடுவது, இலங்கையில் நடக்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமல் தவிர்ப்பது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சிலில் இலங்கைக்கு எதிராக வாக்களிப்பது போன்றன இலங்கை தமிழர் மீதான அக்கறை சார்ந்ததல்ல என்பதை தமிழர்கள் உணர்தல் அவசியம். *

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# மாடுகளை விட மலினமாகக் கணிக்கப்படும் வேலையற்ற ஐரோப்பிய இளைஞர்கள்!




பல நூற்றாண்டுகளாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களையும், அவர்களது மூல வளங்களையும் சுரண்டிச் சூறையாடிய ஐரோப்பிய ஏகாதிபத்தியம், 1917இல் சோசலிச சோவியத் யூனியனின் தோற்றத்துடன் உலகளாவிய ரீதியில் வெடித்துக் கிளம்பிய தேசிய விடுதலைப் போராட்டங்கள் காரணமாக, பல நாடுகளிலிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவானது.

ஆனால் பின்னர் அது தனது தந்திரோபாயத்தை மாற்றிக்கொண்டு, மேற்படி நாடுகளைச் சுரண்டிக் கொள்ளையடிப்பதற்காக தனது மூலதன ஏற்றுமதியை அந்நாடுகளில் அதிகரித்ததுடன், தனது உற்பத்தி நிறுவனங்களையும் அந்நாடுகளுக்கு நகர்த்திக் கொண்டது. இதன் மூலம் மிகக்குறைந்த கூலி உழைப்பில் மிக அதிகளவு பொருட்களை உற்பத்தி செய்து, தனது சொந்த நாட்டு மக்களுக்கும், ஏனைய நாடுகளின் மக்களுக்கும் பல மடங்கு விலையில் விற்று கொழுத்த இலாமீட்டியது

காவலூர் பாலன்

இந்த மூலதன ஏற்றுமதியின் மூலம் ஐரோப்பிய முதலாளி வர்க்கம் மிக முன்னேறிய பாட்டாளி வர்க்கமான தனது சொந்த நாட்டு உழைப்பாளி மக்களைப் பெருமளவில் வேலையற்றவர்களாக்கியதுடன், அவர்கள் பல்லாண்டுகளாகப் போராடிப் பெற்ற உரிமைகளையும் படிப்படியாக ஒழித்து வருகிறது. அதன் காரணமாகவும், முதலாளித்துவ நிதி முறைமையின் வங்குரோத்துத்தனத்தாலும், அண்மைய வருடங்களில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, பல இலட்சம் ஐரோப்பிய – அமெரிக்க தொழிலாளர்கள் வேலையிழந்து வீதிக்கு விரட்டப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்த நாடுகளில் வாழ்வின் ஆரம்பகால வசந்தத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருந்த இளம் சந்ததியினர் வேலை கிடைக்காமையினால் மனம் உடைந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வேலைக் குறைப்பு, வேலை கிடைக்காமை, தொழிற்சங்க உரிமைகளுக்கு வேட்டு என்பன ஒருபுறமிருக்க, இந்த நாடுகளில் வாழும் மக்களின் சமூக நலக் கொடுப்பனவுகள், கல்வி வசதிகள், சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றிலும் பெரும் வெட்டுகள் செய்யப்பட்டு வருகின்றது. முதலாளித்துவம் தனது இருப்பையும், இலாபத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக, பொதுமக்களின் குரல்வளையில் கை வைத்துள்ளது. இது 'செட்டி நஸ்டம் ஊர் மேலே' என்ற ஒரு தமிழ் பழமொழியைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகிறது.

இன்று ஐரோப்பிய நாடுகளிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் மிக மோசமாகத் தலை விரித்தாடும் நாடுகளில் மிக முன்னணியில் இருப்பவை கிரேக்கமும் ஸ்பெயினும்தான். அதனால் இந்த நாடுகளில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் தொடர்ச்சியாக வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். ஐரோப்பிய யூனியன் கவுன்சிலின் ஒரு கணிப்பீட்டின்படி, இந்தப் பிராந்தியத்தில் வேலையில்லாப் பிரச்சினையே முதலிடத்தில் உள்ளது. இதுபற்றிய ஒரு கருத்துக் கணிப்பில், வேலையில்லாப் பிரச்சினைக்கே உடனடி முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என 51 வீதமான ஐரோப்பிய மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரச்சினைக்கு அடுத்ததாகவே அவர்கள் தமது கடன் பிரச்சினை, பயங்கரவாதம், அந்நியர் குடியேற்றப் பிரச்சினை என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

இந்த நிலைமைகள் குறித்து பிரான்சிய ஆராய்ச்சி நிறுவனமான Foundation Robert Schuman ஓர் ஆய்வை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த ஓகஸ்டில் மாத்திரம் 28 ஐரோப்பிய நாடுகளில் 26.6 மில்லியன் மக்கள் வேலையற்றவர்களாக உள்ளார்கள் என ஈரோ ஸ்ரற் (Euro Stat) கணிப்பிட்டுள்ளது. அதிலும் குறிப்பாக ஐரோப்பிய பொது சந்தைப் பகுதியில் (Common Euro Market Area) மட்டும் இத்தொகை கிட்டத்தட்ட 19.17 மில்லியன்களாகும்.

ஈரோ ஸ்ரற் இன் கணிப்பின்படி, அதிகூடிய வேலையற்றோரைக் கொண்டவையாக கிரேக்கம் (27.9 வீதம் – இதில் இளைஞர்கள் 61.5 வீதம்), ஸ்பெயின் (26.2 வீதம் – இதில் இளைஞர்கள் 56 வீதம்) இருக்கின்றன. இதில் முக்கியமான விடயம் என்னவெனில், இளைஞர்கள் வேலையற்று இருப்பது குறித்தே முதலாளித்துவம் மிகவும் கவலையடைந்துள்ளது. ஏனெனில் புதுமையும் ஆற்றலும் மிக்க அவர்கள் தமக்கு சந்தர்ப்பம் வழங்காத தற்போதைய சமூக அமைப்பைத் தூக்கியெறிய முயற்சிக்கலாம் என, அழுகி, முடை நாற்றம் எடுக்கும், காலாவதியாகிப்போன முதலாளித்துவம் அஞ்சுகிறது.

இதில் நகைப்புக்குரியதும், மிகுந்த கண்டனத்துக்கு உரியதுமான விடயம் என்னவெனில், ஐரோப்பிய யூனியன் நாடுகள் தமது வேலையற்ற இளைஞர்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழங்கும் பணத்தொகையை விட, தமது மாடுகளைப்

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...

# மூன்று திசைகளில் பயணிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு!

இவ்வருடம் (2013) செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெற்று முடிந்த வட மாகாணசபைத் தேர்தலில் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குத் தமது வாக்குகளை அள்ளிப் போட்டு ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றிபெற வைத்தார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது பெரிய நம்பிக்கை எதுவும் இல்லாவிட்டாலும், அரசாங்கத்தின் மீது தொடர்ச்சியாக இருந்து வந்த அதிருப்திக்கு ஒரு வடிகாலாக வடபகுதி மக்கள் இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற வைத்திருந்த போதிலும், மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டியது கூட்டமைப்பின் பாரிய கடமையாகும். இதை யாரும் லேசாக மறுத்துவிடவோ அல்லது தட்டிக் கழித்துவிடவோ முடியாது.

ஆனால் வெற்றி பெற்ற பின்னர் கூட்டமைப்பினர் நடந்துகொண்டிருக்கிற முறையென்ன?

இதுவரை காலமும் 'பதவி எமக்குப் பெரிதல்ல, தமிழ் மக்களின் உரிமைதான் பெரிது' என பெரிய இலட்சியம் பேசியவர்கள், ஒரு சாதாரண மாகாணசபையில் அதிகாரம் கிடைத்ததும் சந்தி சிரிக்கும் அளவுக்கு அற்ப பதவிகளுக்காக 'நாய்ச் சண்டை'யில் இறங்கினார்கள். பதவிக்கான இந்தக் குடுமிச் சண்டை தேர்தலின் பின்னர்தான் ஏற்பட்டது என்றல்ல. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் நியமனத்தின் போதே இந்தச் சண்டை ஆரம்பித்துவிட்டது. அந்தப் பதவியில் கண் வைத்திருந்த தமிழரசுக் கட்சியனை பொதுச்செயலாளர் மாவை சேனாதிராசா, நிர்ப்பந்தச் சூழ்நிலையால் வேண்டாவெறுப்பாகவே சி.வி.விக்னேஸ்வரனுக்கு அதை விட்டுக்கொடுத்தார். அப்படி விட்டுக் கொடுத்தாலும் மறைமுகமாக அவரும், அவரது ஆதரவாளர்களும் விக்னேஸ்வரனைத் தோற்கடித்து விட வேண்டும் அல்லது குறைந்த பட்சம் மிகக் குறைந்த விருப்பு வாக்குகளையாவது எடுக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே தேர்தல் வேலைகளை மேற்கொண்டனர். ஆனால் விக்னேஸ்வரனுக்கு மிகப்பெரும் விருப்பு வாக்குகளை அளித்து வடக்கு மக்கள் மாவை கோஸ்டியின் எண்ணங்களில் மண்ணைத் தூவி விட்டனர்.



கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த விடயத்தில் திட்டமிட்டே காரியங்களைச் செய்துள்ளார் என்பதை இப்பொழுது அவதானிக்க முடிகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி பெரியண்ணனாக நடந்து கொள்கிறது என்ற பங்காளிக் கட்சிகளின் குற்றச்சாட்டை பொய்யாக்கவும், மாவை சேனாதிராசா போன்ற தீவிர இனவாத, புலி ஆதரவு நபர்கள் முதலமைச்சர் ஆவதைத் தடுப்பதற்காகவும், எந்தவொரு கட்சியிலும் உத்தியோகபூர்வமாக அங்கம் வகிக்காத விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக்கியதின் மூலம், சம்பந்தன் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்திவிட்டார்.

சம்பந்தனின் இந்த 'இராஜதந்திரத்தில்' விக்னேஸ்வரனின் சம்பந்தியான அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் இராஜதந்திரமும், உண்மையான பெரியண்ணன் இந்தியாவின் ஆலோசனையும் பின்னிப் பிணைந்து இருக்கின்றன என்பது இரகசியமானது அல்ல.

தேர்தல் முடிந்த பின்னர், முதலமைச்சர் பதவியேற்பு வைபவத்தின் போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ முன்னிலையில் பதவி ஏற்கக்கூடாது என்ற எதிர்ப்பலையை, சில மாகாணசபை உறுப்பினர்கள் மூலம் மாவை கோஸ்டி ஏற்படுத்த முயன்றது. ஆனால் அதிலும் சம்பந்தன் அணியே வெற்றிபெற்றுக் கொண்டது. பின்னர் உறுப்பினர்கள் பதவி ஏற்பின் போது, ஜனாதிபதிக்கு முன்னால் பதவி ஏற்ற முதலமைச்சர் முன்னிலையில் தாம் பதவி ஏற்கமாட்டோம் என சில உறுப்பினர்கள் மூலம் கிளர்ச்சியை உண்டுபண்ணப் பார்த்தனர். ஆனால் 9 பேரைத் தவிர ஏனையோர் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறீ பிரசன்னமாக இருக்க, முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்னிலையிலேயே பதவியேற்றுக் ண்கொடனர். அவ்வாறு பதவியேற்றவர்களில் முகப்பு நட்சத்திரமாக காட்சிப்படுத்தப்பட்டவரும், புலிகளின் திரிகோணமலை முன்னாள் அரசியல் பொறுப்பாளர் எழிலனின் மனைவியுமான அனந்தியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரை வைத்து 'பந்து விளையாட' முயன்றவர்களுக்கு இது ஏமாற்றமாகிப் போனது.

அதைத் தொடர்ந்து மாகாணசபை அமைச்சுப் பதவிகளுக்கான அடிதடி ஆரம்பமானது. இதில் கூடுதலாக முனைப்புக் காட்டியர்கள் ரெலோ செல்வம் அடைக்கலநாதனும், ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஸ் பிரேமச்சந்திரனும் ஆவர்.

மன்னார் மாவட்டத்துக்கு அமைச்சுப் பிரதிநிதித்துவம் வழங்காமல், தனது கட்சியைச் சேர்ந்தவரும், வல்வெட்டித்துறை வாசியுமான எம்.கே.சிவாஜிலிங்கத்திற்கு

அமைச்சுப் பதவி வழங்கத் தீர்மானித்திருப்பதை தான் எதிர்ப்பதாகவும், அதனால் ரெலோ தலைமைப் பதவியைத்தான் துறக்கப் போவதாகவும் அடைக்கலநாதன் மிரட்டல் விடுத்தார். ஆனால் ஐஸ்வரியங்கள் நிறைந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கப் போவதாக அவர் அறிவிக்கவில்லை!

அதேநேரத்தில் இந்தத் தேர்தலில் வென்று மாகாணசபை உறுப்பினரான தனது தம்பிக்கு அமைச்சுப் பதவி வழங்காமல் தனது கட்சியைச் சேர்ந்த ஐங்கரநேசன் என்பவருக்கு அமைச்சுப் பதவி வழங்கியது தவறு என்றும், அதனால் ஐங்கரநேசனை தனது கட்சியிலிருந்து நீக்குவதாகவும் சுரேஸ் அறிவித்தார். (எப்படி இருக்கிறது சுரேஸ் கட்சியின் ஜனநாயக நடைமுறை!) ஆனால் முதலில் அவர் தனது தம்பிக்கு அமைச்சுப் பதவி வழங்க வேண்டும் என்று கேட்காமல், 'பந்தியில் பக்கத்தில் இருந்து சாப்பிடுபவருக்கு சொதி வேண்டும்' என்று கேட்பது போல, 'போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும்' என்று கூறினார். ஆனால் பி.பி.சி தமிழோசை பேட்டியொன்றில் தனது தம்பிக்கு அமைச்சுப் பதவி கேட்டது உண்மைதான் என்று 'பெருந்தன்மையாக' ஒத்துக் கொண்டார்!

இதில் ஒரு வேடிக்கையான விடயம் என்னவெனில், இந்த ஐங்கரநேசன் என்பவர் எப்பொழுது ஈ.பி.ஆர்.எல்.எப்பில் இணைந்து கொண்டார் என்பது பலருக்கு ஆச்சரியமாக இருப்பதுதான். கந்தர்மடத்தில் 'யூனிவேர்சல்' என்ற பெயரில் தனியார் பாடசாலை (டியூட்டரி) நடாத்தி வந்த ஐங்கரநேசன், 'நங்கூரம்' என்ற சுற்றுச்சுழல் சஞ்சிகை ஒன்றையும் நடாத்தி வந்தார். ஆரம்பத்தில் ரெலோ இயக்கத்தில் இணைந்து வேலை செய்தார். புலிகள் ரெலோவைத் தடைசெய்த போது, இவர் மீதும் பலத்த தாக்குதலை மேற்கொண்டனர். அதன் பின்னர் சில மாற்று இயக்க உறுப்பினர்கள் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான பின்னர், 'உதைத்த காலை நக்குவது போல' புலிகளிடமே சரணாகதி அடைந்தது போல, ஐங்கரநேசனும் புலிகளின் தீவிர ஆதரவாளராக மாறினார். இப்பொழுது என்னவென்று பார்த்தால், அவரை ஈ.பி.ஆர்.எல்.எப்பிலிருந்து விலக்குவதாக சுரேஸ் அறிவித்துள்ளார்! அமைச்சர் ஐங்கரநேசன் எப்பொழுது இந்த அமைப்பில் இணைந்தாரோ என்பது சிலர் கூறுவது போல அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

அடைக்கலநாதனதும், சுரேசினதும் இந்த குற்றச்சாட்டுகள் குறித்து கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனோ அல்லது முதலமைச்சர் விக்கினேஸ்வரனோ பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்பதுடன், தமது வண்டியை தொடர்ந்து தாம் நினைத்தபடி ஓட்டிச் செல்கின்றனர்.

இதில் சுவாரசியமான ஒரு விடயமென்னவெனில், கூட்டமைப்புத் தலைமைக்கு எதிரான சுரேஸ், அடைக்கலநாதன், சித்தார்த்தன், ஆனந்தசங்கரி ஆகியோரின் போர்க்கொடி தூக்குகை பற்றி விமர்ச்சித்த கனடாவிலிருந்து வெளிவரும் புலி சார்புப் (?) பத்திரிகை ஒன்று, இவர்களது எதிர்ப்பின் பின்னணியில் இலங்கை அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவினரே பின்னணியில் இருப்பதாகத் தமக்கு நம்பிக்கையான தகவல் கிடைத்திருக்கிறது என்று தெரிவித்திப்பதுதான்.

அரச புலனாய்வுப் பிரிவினரின் செயல்பாடு குறித்து இந்தப் பத்திரிகைக்கு நம்பிக்கையான தகவல் கிடைப்பதென்றால், இந்தப் பத்திரிகைக்கு தகவல் கொடுக்கக்கூடிய அளவுக்கு, இந்தப் பத்திரிகைக்கு அந்தப் புலனாய்வுப் பிரிவினருடன் ஏதோவொரு வகையில் தொடர்பு இருக்கிறதோ? (தீவிர புலி சார்பு வேடம் போடும் இந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு கே.பி என்றழைக்கப்படும் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆயுதக் கொள்வனவாளருடன் நெருக்கமான தொடர்பு உண்டென்றும், அவருடன் இணைந்து முல்லைத்தீவில் அனாதைக் குழந்தைகள் இல்லமொன்றுக்கு நிதி சேகரித்து உதவி வருகிறார் என்றும், யாரோ எமது காதில் கிணுகிணுக்கிறார்கள்! எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ, யாம் அறியோம் பராபரமே!!)

மாவை கோஸ்டி ஒருபுறத்தில் சம்பந்தன் – விக்னேஸ்வரன் அணிக்கு எதிராகச் செயல்பட, இன்னொரு புறத்தில் வேறொரு கோஸ்டியும் அவர்களுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்தக் கோஸ்டியில் தம்பிக்கு மந்திரிப் பதவி கிடைக்காததால் ஆத்திரமடைந்துள்ள சுரேஸ், மன்னாருக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை என்று 'குமுறிய' ('உதயன்' பத்திரிகையின் பரிபாசையில்) அடைக்கலநாதன், மந்திரிப் பதவி கிடைக்கும் என எதிர்பார்த்து ஏமாந்த, இந்தத் தேர்தலில் இரண்டாவதாக கூடுதலான விருப்பு வாக்குகள் பெற்ற த.சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினரும், தீவிர புலி விசுவாசியுமான சிறீதரனால் மாகாணசபைத் தேர்தலில் திட்டமிட்டுத் தோற்கடிக்கப்பட்ட வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் அணி சேர்ந்துள்ளனர்.

ஆனால் கொள்கைகளற்ற இந்த சந்தர்ப்பவசத்தால் உருவான இக்கூட்டு நின்று பிடிக்குமா என்பது சந்தேகமே. அத்துடன் இவர்கள் கூட்டமைப்பிலிருந்து எப்பொழுது வெளியேறுகின்றனரோ அன்றே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோஸ்டிக்கு ஏற்பட்டது போன்ற அரசியல் அனாதை நிலைதான் இவர்களுக்கும் ஏற்படும் என்பது இவர்களுக்கும் நன்கு தெரியும். அதனால்தான் இவர்கள் கூட்டமைப்புத் தலைமையை காரசாரமாக விமர்சித்தாலும், தாம் கூட்டமைப்பிலேயே தொடர்ந்தும் இருப்போம் என அடிக்கடி கூறி வருகின்றனர். அண்மையில் தனது தேர்தல் தோல்விக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்தான் காரணமென்று காரசாரமாகக் குற்றஞ்சாட்டிய ஆனந்தசங்கரி (இந்த விடயம் சம்பந்தமாக 'வானவில்' 2013 செப்ரெம்பர் இதழில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது), சம்பந்தன் மீதும் கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புதான், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி (புலிகளிடம் இரவல் வாங்கிய வாக்கியம் இது) என்று அதன் தலைமை அடிக்கடி தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், அது ஒற்றுமையான ஒரு அமைப்பல்ல என்பது முன்னரே பலருக்குத் தெரிந்த விடயம் என்ற போதிலும், வட மாகாணசபைத் தேர்தல் நடந்து முடிந்து, அதிகாரம் அவர்கள் கைக்கு வந்த பின்னர்தான், அவர்களது சுய அபிலாசைகளும், ரூபங்களும் மிக அம்மணமாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இப்பொழுது மூன்று அணிகளாக, அதாவது சம்பந்தன் கோஸ்டி (இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், அ.விநாயகமூர்த்தி, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளடக்கம்), மாவை கோஸ்டி (இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன், ஈ.சரவணபவன், அரியநேத்திரன் அடக்கம்), சுரேஸ் கோஸ்டி (இதில் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், வீ.ஆனந்தசங்கரி அடக்கம்) என செயல்பட ஆரம்பித்துள்ள கூட்டமைப்பு, மீண்டும் தேர்தல்கள் ஏதாவது வந்தால், தமக்குள் உள்ள வெடிப்புகளை 'பிளாஸ்ரர்' போட்டு ஒட்டிக்கொண்டு, மக்களை ஏமாற்றி வாக்குக் கேட்க முன்வருவார்கள். அதுவரையும் அவர்கள் நாய்ச்சண்டையில்தான் ஈடுபட்டிருப்பார்கள்.

அவர்கள் இதுபற்றி கவலையோ அல்லது வெட்கமோ படப் போவதில்லை. ஆனால் அவர்களை நம்பி வாக்களித்த மக்கள்தான் தாம் செய்த தவறு பற்றி கொஞ்சம் பாரதூரமாகச் சிந்திக்க வேண்டும். குறைந்த பட்சம் வழமையாக மாற்றுச் சக்திகளுக்கு தாம் வழங்கி வந்த 35 வீதமான வாக்குகளில் 15 வீதமான வாக்குகளைச் கூட, தமிழ் மக்கள், இந்த மாகாணசபைத் தேர்தலின் போது பிரித்தெடுத்து கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளனர். அந்த வாக்குகளையாவது திரும்பவும் கூட்டமைப்பிடமிருந்து திரும்ப எடுத்து அதற்கு உரிய மாற்றுத் தமிழ் சக்திகளுக்கு வழங்க மக்கள் அடுத்த தேர்தலில் முன்வர வேண்டும். தமது தவறைத் திருத்துவதற்கு அது மக்கள் முன்னால் உள்ள முதல் வழிமுறையாகும். அதை விடுத்து ஜனநாயக விரோதமாக எல்லாவற்றையும் திருடர்களிடமே பறிகொடுத்துவிட்டுவிட்டால், ஒட்டாண்டியாக நிற்கப்போவது தமிழ் பொதுமக்கள்தான். *

3ம் பக்கத்தொடர்ச்சி...

பராமரிப்பதற்கு கூடுதலான தொகையைச் செலவிடுகின்றன என்பதுதான். இதுபற்றி ஒரு கணிப்பீட்டை மேற்கொண்ட ஸ்பெயினைச் சேர்ந்த Council's Jose Ignacio Torreblanca என்ற நிறுவனம் மாடு ஒன்றைப் பராமரிப்பதற்கு வருடமொன்றுக்கு 12.7 யூரோவும், வேலையற்ற இளைஞனுக்கு 1.26 யூரோவும் செலவிடப்படுவதாகக் கூறியுள்ளது!

இந்தத் தகவல்கள் முழுமையானவை என்று கூறிவிட முடியாது. இன்றைய உலகில் ஊடகங்கள், புள்ளிவிபர நிறுவனங்கள், ஆய்வு அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்று கூறப்படுபவைகளில் பெரும்பாலானவை முதலாளித்துவ மூலதனக் கும்பல்களால் கட்டுப்படுத்தப்படுவதனால், அவை தமது எஜமானர்களுக்குத் தீங்கிழைக்கும் வகையில் எந்தவொரு கருத்தையும் வெளியிடமாட்டா என்பது நிதர்சனமாகும். எனவே அவை வழங்கியுள்ள புள்ளிவிபரங்களைவிட அதிகளாவிலான மக்கள் வேலையற்று இருப்பார்கள் என நம்பலாம்.

இது ஐரோப்பாவின் பிரச்சினை மட்டுமல்ல, உலகப் பிரச்சினையாகும். இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் கனடாவில் எடுக்கப்பட்ட ஓர் கணிப்பீட்டில் 25 வயதிற்குக் கீழான 4,11,000 இளைஞர்கள் வேலையற்ற நிலையிலுள்ளனர். கனடாவில் 14.5 வீதமான இளைஞர்கள் வேலை எதுவும் கிடைக்காது துன்பப்படுகின்றனர். 2011இல் கனடிய புள்ளிவிபர அமைப்பு (Statistics Canada) பெற்ற விபரங்களின்படி, 30 வயதிற்குக் கீழான 9,04,000 பேர் வேலையற்று, உரிய கல்வி அறிவற்று, போதிய பயிற்சி அற்று இருந்துள்ளார்கள்.

சர்வதேச தொழில் நிறுவனம் (International Labour Organization) மே மாதத்தில் பெற்ற, 'A Generation at Risk' என்ற தலைப்பின் கீழான ஒரு கணிப்பின்படி உலகம் முழுவதும் வேலையற்ற 73 மில்லியன் இளைஞர்கள் உள்ளார்கள். இதைவிட இன்னும் 200 மில்லியன் இளைஞர்களின் திறமைகள் (Young Talent) குறைந்த பாவிப்புக்கு உள்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலை தொடருமாயின் மிகவும் பாரதூரமான அரசியல், பொருளாதார நெருக்கடிகளைக் கொண்டு வரும்.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில், இந்த இளைஞர்கள் இன்று நடைமுறையிலுள்ள சமூக – பொருளாதார – அரசியல் அமைப்பில் முற்றுமுழுதாக நம்பிக்கை இழந்துள்ளார்கள் என்பதுதான். *

---

"நம்மைச் சூழ்ந்திருக்கும் உலகத்துக்கும், அந்த உலகத்தைப் பற்றிய நமது சிந்தனைகளுக்கும் இடையே இருக்கும் உறவு என்ன? யதார்த்த உலகை நமது சிந்தனையால் அப்படியே புரிந்துகொள்ள முடியுமா? யதார்த்த உலகத்தைப் பற்றிய நமது எண்ணங்களிலே அந்த யதார்த்தத்தை உள்ளபடியே சரியாக, கணக்காக, பிரதிபலிக்கச் செய்ய நம்மால் முடிகிறதா? தத்துவத்தின் பரிபாஷையில் இந்தக் கேள்வியை வாழ்நிலையும் சிந்தனையும் ஒன்றுதானா என்ற கேள்வியாகக் குறிப்பிடுகிறார்கள்".

**– 'லூத்விக் பேயர் பாக்' என்ற நூலில் ஏங்கெல்ஸ்**

"மனிதனோ அல்லது வேறு எந்த உயிரினமோ வாழ்ந்திராத, வாழ்ந்திருக்க முடியாத நிலையில், ஒரு காலத்தில் பூமி இருந்தது என இயற்பியல்துறை விஞ்ஞானங்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றன. உயிரோடு இயங்கும் ஜீவராசிகள் பின்னால் வந்தவைதாம். நீண்ட பரிணாம வளர்ச்சியின் பயனாக வந்தவையே அவை"

**– 'பொருள்முதல்வாதமும் அனுபவஞான விமர்சனமும்' என்ற நூலில் லெனின்**

"காலம், களம் என்பவை எல்லா வாழ்நிலைகளுக்கும் ஆதார வடிவங்கள் ஆகும். களத்துக்கு அப்பாற்பட்டு எதுவும் இருக்க முடியும் என்று சொல்வது எவ்வளவு முட்டாள்தனமோ, அதேபோல் காலத்துக்கு அப்பாற்பட்டு எதுவும் இருக்க முடியும் என்று சொல்வதும் முட்டாள்தனமாகும்".

**– 'டூரிங்குக்கு மறுப்பு' என்ற நூலில் ஏங்கெல்ஸ்**

"புறநிலையில் யதார்த்தமாக இருக்கும் தன்மை, நமது மனதுக்கு வெளியே இருக்கும் தன்மை, என்று பொருளுக்கு ஒரு குணாம்சம் உண்டு. இந்த ஒரேயொரு குணாம்சத்தை அங்கீகரிப்பதோடுதான், தத்துவார்த்த ரீதியான பொருள்முதல்வாதம் சம்பந்தப்பட்டிருக்கிறது எனலாம்".

**– 'பொருள்முதல்வாதமும் அனுபவஞான விமர்சனமும்' என்ற நூலில் லெனின்**

அடூர் கோபாலகிருஸ்ணன் மலையாளத்தைச் (கேரளா) சேர்ந்த ஒரு சினிமா நெறியாளராக (டைரக்டர்) இருந்தபோதிலும், முழு இந்தியாவினதும் உன்னதமான நெறியாளர்களில் ஒருவராக இருக்கின்றார். தமிழ் சினிமா நெறியாளர்கள் டசின் கணக்கில் ஒன்றன் பின் ஒன்றாக ஏராளமான மசாலாப் படங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கையில், கோபாலகிருஸ்ணனோ அதில் நம்பிக்கையும், ஆர்வமும் அற்றவர். தனது 75 ஆண்டுகால சினிமா வாழ்க்கையில் இதுவரை 11 படங்களை மட்டுமே இயக்கியவர்.

அவரது இந்த 11 படங்களுக்காக 11 தேசிய விருதுகள், பத்ம விருதுகள், தாதாசாஹேப் பால் விருது, பிரிட்டிஸ், பிரான்ஸ் என கடல் கடந்த பல அங்கீகாரங்களையும் பெற்றவர். கான்ஸ், யோசிப்பது இல்லை. பார்த்த சம்பவங்கள், பாதித்த விசயங்கள், சந்தித்த மனிதர்கள், வாசித்த புத்தகங்கள் என ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாத புள்ளிகளில் இருந்துதான், என் படத்துக்கான கதை பிறப்பதாக நினைக்கிறேன். என் கதையும் கதாபாத்திரங்களும், என்னுடைய மண்ணையும் மக்களையும் சார்ந்தவையாகவே இருக்கும். நான் பார்க்காத ஒரு உலகத்தை, சந்திக்காத மனிதர்களைப் பற்றி என்னால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. என்றோ ஒருநாள் தூக்குத் தண்டனை நிறைவேற்றும் தொழிலாளியின் பேட்டியை நாளிதழில் படித்தேன். பின்னொரு காலத்தில் அந்தச் சம்பவம் திரைப்படமானது. நான் என் கிராமங்களில் பார்த்த சாதிய வேறுபாடு, பெண்ணடிமைத்தனம், கம்யூனிஸ்ட் கட்சி கடைநிலைத் தொண்டனின் அசல் வாழ்க்கை ஆகிய உண்மைகளைத்தான் படமாக்கி

# தமிழகத்திலும் ஆந்திராவிலும் சினிமா ஹீரோக்களை தலைவர்களாக நினைத்து வழிபடும் அறிவற்ற சூழல் இருக்கிறது!

## - மலையாள சினிமா இயக்குநர் அடூர் கோபாலகிருஸ்ணன்!!

வெனிஸ், பாரீஸ், ரொறன்டோ போன்ற இடங்களில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாக்களில் கொண்டாடப்படும் ஒரேயொரு இந்திய திரைப்பட நெறியாளராக அவர் இருக்கின்றார்.

அண்மையில் தமிழகத்திலிருந்து வெளியாகும் 'ஆனந்தவிகடன்' வார இதழ் அவரைப் பேட்டி கண்டது. அதிலிருந்து சில பகுதிகள்:



அடூர் கோபாலகிருஸ்ணன்

**"இன்றைய மலையாள சினிமாவின் போக்கு திருப்தி அளிக்கிறதா?"**

"ஒரு காலத்தில் எப்படி தமிழ் சினிமா மும்பையைப் பார்த்து கெட்டுப்போய் இருந்ததோ, அப்படி இப்போது மலையாள சினிமா, தமிழ் சினிமாவைப் பார்த்துக் கெட்டுப்போய் இருக்கிறது. தமிழகத்தில் வெளியாகும் நான்காம் தர கமர்சியல் படங்களை அப்படியே பிரதியெடுத்து, ஏழாந்தர சினிமாக மலையாளத்தில் வெளியிடுகிறார்கள். ஒரு காலத்தில் நல்ல படங்களை மட்டுமே கொடுத்த கேரள சினிமா, இப்போது பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது. ஆர்ட் படங்கள் முற்றிலுமாகத் தொலைந்து விட்டன. வேறென்ன சொல்ல?"

**"உங்கள் படத்தின் கதையைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல் என்ன?"**

"நான் கதையை ஒருபோதும் கற்பனையாக

இருக்கிறேன். ஏனென்றால், கதை எனப்படுவது வெறும் கதையல்ல!"

**"திரையுலகைச் சேர்ந்தவர்கள் அரசியலுக்கு வருவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"**

"யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். ஆனால், அதற்கு முன் அரசியலை நன்றாகப் படித்துவிட்டு, மக்களுக்கு என்ன தேவை என்பதைப் புரிந்துகொண்டு வர வேண்டும். ஆந்திராவிலும் தமிழகத்திலும் சினிமா ஹீரோக்களை தலைவர்களாக நினைத்து வழிபடும் அறிவற்ற சூழல் இருக்கிறது.

எம்.ஜி.ஆர், என்.டி.ஆர், ஜெயித்த காலம் வேறு. ஜெயலலிதாவே எம்.ஜி.ஆரின் இதயக்கனி என்பதால்தான் ஆட்சிக்கு வந்தார். தமிழ் நாட்டைப் போல கேரளாவில் நடிகர்கள் அரசியலுக்கு வந்தால், கட்டாயம் தோல்விதான் அவர்களை வரவேற்கும்." *

---

"மனம் என்பது பொருளின் அதியுன்னதமான ஒரு படைப்பேயொழிய வேறில்லை. நமது உணர்வும் சிந்தனையும் புலனியக்கத்துக்கு அப்பாற்பட்டதாக எவ்வளவுதான் தோன்றினாலும், அவையெல்லாம் மூளை என்கிற பொருளாலான உடல் உறுப்பின் விளைபொருளேயாகும்".

**'லுத்விக் பேயர் பாக்' என்ற நூலில் ஏங்கெல்ஸ்**

# இலங்கையில் கண்டது கேட்டது பற்றி 'கலைமகள்' பத்திரிகையாளர்!

தமிழகத்தில் இருந்து 81 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் 'கலைமகள்' மாத இதழைச் சேர்ந்த கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன் அண்மையில் இலங்கைப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவர் சென்னை திரும்பிய பின்னர் தனது இலங்கைப் பயண அனுபவங்களை 'இலங்கையில் கண்டதும் கேட்டதும்' என்ற தலைப்பில் கலைமகளில் தொடர்ந்து எழுதி வருகிறார். அதிலிருந்து சில பகுதிகள்:

'இலங்கை வீதிகள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புடன் இருக்கின்றன. கொழும்பு மாநகரில் ஒரு சின்னக் குப்பையைக் கூட நான் பார்க்கவில்லை.

இலங்கை எங்கும் பெரிய வீதிகளிலிருந்து சின்ன வீதிகள் வரை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்றிலும் பெயர்ப்பலகை காணப்படுகிறது. மக்கள் அன்பாக இருக்கிறார்கள். ஒருவருக்கு ஒருவர் உதவுகிறார்கள். சாலைகளில் வாகனங்களில் கடந்து செல்லும்போது கூட ஒரு சின்ன ஒலியைக் கூட எழுப்புவதில்லை.

ஆன்மீகம் தழைத்திருக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் கீழ் இந்து அறநிலையத்துறை இயங்கி வருகிறது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்று இதை அழைக்கிறார்கள். இந்த ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள் தமிழ் புத்தாண்டு அன்று பஞ்சாங்கத்தை வெளியிட்டுள்ளார்கள். வாடிக்கையானதுதான் இது என்றாலும் இலவசமாகவே 40 பக்க பஞ்சாங்கம் எல்லோருக்கும் வழங்கப்படுகிறது.

பனைமரம் இலங்கையில் அதிகமாகக் காணப்படும் மரம். யாழ்ப்பாணத்திற்கு இதுதான் அடையாளம். பனையின் பெருமையைப் பல ஈழக் கவிஞர்கள் எழுத்தாளர்கள் படைப்புகளின் மூலம் ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். சிறந்த இலக்கியங்கள், புராணங்கள் பனை ஓலையில்தான் எழுதப்பட்டன. இந்தப் பனை ஓலைகளைத் தேடித் தேடி அலைந்தவர்தான் உ.வே.சாமிநாதய்யர். பனை மரத்தை வெறும் மரமாகப் பார்க்க முடியாது. கலாச்சாரச் சின்னம். இலக்கியங்களின் பாதுகாவலர்கள் பனைமரங்கள். பனை ஓலையை முடைந்து பெட்டியாக்கித் தின்பண்டங்களையும் வைக்கலாம். பனை ஓலையில் அன்று எழுத்தாணியால் எழுதி வைத்த இலக்கியங்கள்தான் இன்று பொக்கிஸமாக நமக்குத் தெரிகின்றன. ஈழத்து இலக்கியவாதிகள் பனை மரத்தை ரொம்பவும் சிலாகிக்கிறார்கள். நல்ல எழுத்தின் மீது ஈழத்து எழுத்தாளர்களுக்கு எப்போதும் நம்பிக்கை இருக்கிறது.'

(***எமது குறிப்பு:*** பழம் பெருமை வாய்ந்த 'கலைமகள்' சஞ்சிகையின் ஒரு இதழியலாளர் இலங்கையில் தான் கண்டது கேட்டதை விரிவாக எழுதும் போது தெரிவித்தவற்றில் சில வசனங்கள்தான் இவை. அவர் தான் கண்டதையும், கேட்டதையும் உள்ளது உள்ளபடி தனது கட்டுரைத் தொடரில் தெரிவித்துள்ளார். அவர் மட்டுமல்ல, இலங்கை சென்று நிலைமைகளை நேரடியாகப் பார்த்து வந்த தமிழகப் பத்திரிகையாளர்கள் எல்லோருமே ஏறத்தாழ இவ்வாறுதான் இலங்கை நிலவரம் பற்றிக் கூறுகிறார்கள்.

ஆனால் 20 மைல் தொலைவில் உள்ள இலங்கையை ஒருபோதும் எட்டியும் பார்க்காத — அதுவும் இலங்கை அரசு பலதடவைகள் அழைப்பு விடுத்தும் - தமிழக அரசியல் கட்சிகளும், சில ஊடகவியலாளர்களும்தான், தமது தலைகளில் பேனையும் ஈறையும் வைத்துக்கொண்டு, இலங்கைத் தமிழர்களின் உடலில் கட்டெறும்பு ஊர்கிறது என்று அல்லும் பகலும் புலம்பி வருகிறார்கள். இதை என்னவென்று சொல்வது?
- ***வானவில்*** )

# மோனலிசா ஓவியத்துக்கு வடிவம் கொடுத்தவரை இனம்காண முயற்சி!

உலகப் புகழ்பெற்ற மோனலிசா ஓவியத்தைத் தீட்டியர் லியோனார்டோ டாவின்சி என்பவர் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

அவர் அந்த ஓவியத்தைத் தீட்டுவதற்கு லிசா தெரார்த்தினி என்ற பெண் 'மொடலாக' இருந்துள்ளார் என நம்பப்படுகிறது. 1542இல் இறந்த இந்தப் பெண்மணியின் உடல் இத்தாலியிலுள்ள ஃப்ளாரென்சில் என்ற இடத்திலுள்ள உர்சுரின் கொன்வென்ற்றில் புதைக்கப்பட்டது.

இப்பொழுது அவரைப் புதைத்த இடத்திலிருந்து சில எலும்புகளை ஆய்வாளர்கள் தோண்டி எடுத்துள்ளனர். அது அவரது எலும்புகள்தானா என்பதைக் கண்டு பிடிப்பதற்காக, பசிலிக்கா என்ற இடத்தில் புதைக்கப்பட்டுள்ள அவரது மகன்களின் எலும்புகளைத் தோண்டி எடுத்து ரீ.என்.ஏ பரிசோதனை செய்யவுள்ளனர்.

எலும்புகள் மோனலிசாவின் ஓவியம் தீட்டுவதற்கு மொடலாக இருந்தவரின்தான் என நிரூபிக்கப்பட்டால், வர்சுவல் மறு அமைப்பு மூலம் முகத்தை வடிவமைத்து, மோனலிசா ஓவியத்துடன் பொருந்துகிறதா என ஆய்வு செய்யவுள்ளனர்! *

# இந்திய அதிகார வர்க்கத்தின் அட்டூழியத்தால் காடுகளில் சரண் புகுந்த 50 இலட்சம் பழங்குடி மக்கள்!




**சி**ல மாதங்களுக்கு முன்னர் இந்தியாவின் மிகப் பின்தங்கிய மாநிலங்களில் ஒன்றான சந்தீஸ்கர் மாநிலத்தில் 'மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிரான நடவடிக்கை' என்ற போர்வையில் அங்கு வாழும் பழங்குடி மக்களுக்கு எதிராக இந்திய ஆளும் வர்க்கம் மேற்கொண்ட மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் குறித்தும், அதனால் அந்த மக்கள் அனுபவித்த மாபெரும் துன்பங்கள் குறித்தும், வெளி உலகிற்கு தெரிய வராமல் மறைக்கப்பட்டுள்ளது. இந்த அநியாயங்கள் குறித்து ஒருசில ஊடகங்களே சில விபரங்களை வெளியிட்டுள்ளன.

முன்னர் பல ஆண்டுகளாக 'நக்சலைற் இயக்கம்' என முதலாளித்துவ ஊடகங்களால் அழைக்கப்பட்டு வந்த இந்தியாவின் மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கமே, தற்பொழுது அதே ஊடகங்களால் 'மாவோயிஸ்ட் இயக்கம்' என குறிப்பிடப்படுகிறது.

1966இல் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியரான சாரு மஸூம்தார் என்பவரும், கனுசன்யால், சுரன்போஸ் போன்றவர்களும் இணைந்து மேற்கு வங்கத்தின் சிலிகுரி மாவட்டத்திலுள்ள நக்சல்பாரி என்ற கிராமத்தில் நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்து ஏழைக் கூலி விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் இயக்கமொன்றை ஆரம்பித்து வைத்தனர். பின்னர் அந்த நிலப்பறி இயக்கம் முழு இந்தியாவையும் பற்றிப் பிடித்தது. அதன் காரணமாக கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை முதலாளித்துவ ஊடகங்கள் 'நக்சலைற் இயக்கம்' என அழைக்க ஆரம்பித்தன.

ஆனால் 1970களின் முற்பகுதியில் சாரு மஸூம்தார் இந்திய பொலிசாரிடம் சிக்கிக் கொண்டார். பின்னர் அவர் பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் போது மர்மமான முறையில் மரணமடைந்தார். இந்த மரணம் இயற்கையானது அல்ல எனவும், அவர் பொலிசாரினால் திட்டமிட்டு விசமூட்டிக் கொல்லப்பட்டார் எனவும், பின்னர் கேரளாவைச் சேர்ந்த பொலிஸ்காரா ஒருவர் ஓய்வுபெற்ற பின்னர் தாம் நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சாருமஸூம்தார் மரணமடைந்ததைத் தொடர்ந்து, 'நக்சலைற் இயக்கம்' பல கூறுகளாகிச் செயற்படத் தொடங்கியது. அவற்றில் 'கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் மாவோயிஸ்ட் மையம்' என்ற அமைப்பும், 'இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)' அமைப்பும், முக்கியமானவைகளாக இருந்தன. இந்த இயக்கங்கள் பல கூறுகளாக இருந்த நிலைமையில் பலமான முறையில் செயற்பட முடியாமல் இருந்ததுடன், இந்திய அரசாங்கத்தின் அடக்கு முறைக்கும் முகம் கொடுக்க முடியாமல் இருந்தன.

அதனால் இந்த இயக்கங்கள் நீண்ட கலந்துரையாடல்களுக்குப் பின்னர் அடர்ந்த காட்டுப் பகுதியொன்றில் தமது மாநாடு ஒன்றை நடாத்தி, தம்மை ஒன்றுபட்ட கட்சியாக – அதாவது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) என்ற பெயரில் தமது கட்சியை மறுசீரமைத்துக் கொண்டன. அதன் பின்னர் அக்கட்சியின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் மத்திப்படுத்தப்பட்ட தலைமையின் கீழ் மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் இந்தியாவின் பல மாநிலங்களில் பலமாகவும், வேகமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் புரட்சிவாதக் கட்சி, சீனப் புரட்சியின் போது, தலைவர் மாஓசேதுங் பின்பற்றிய முதலில் கிராமப்புறங்களில் செந்தளங்களை நிறுவி, பின்னர் கிராமங்களிலிருந்து நகரங்களைச் சுற்றி வளைத்து, இறுதியாக முழுநாட்டையும் கைப்பற்றுவது என்ற, 'மக்கள் யுத்த' கோட்பாடே தங்களது வழிமுறையும் என்று அறிவித்துள்ளதால், இந்த இயக்கத்துக்கு ஊடகங்கள் 'மாவோயிஸ்ட் இயக்கம்' என நாமகரணம் சூட்டியுள்ளன.

இப்பொழுது இந்த மாவோயிஸ்ட் இயக்கம் இந்தியாவின் சந்தீஸ்கர், ஜார்கண்ட், ஒடிஸ்சா, மகாராஸ்டிரா, மேற்கு வங்கம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் பலமாகவும், வேறு பல மாநிலங்களில் ஓரளவு பலமாகவும் செயல்பட்டு வருகின்றது. நாட்டிலுள்ள சுமார் 250 மாவட்டங்களில் மாவோயிஸ்ட் இயக்கம் மிகவும் பலமாகச் செயல்பட்டு வருவதாக இந்திய அரசின் புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

குறிப்பாக காட்டுப் பிரதேசங்களிலும், மலைப் பிரதேசங்களிலும் வாழும் இலட்சக்கணக்கான பழங்குடி மக்களிடம் இந்த இயக்கம் மிகவும் செல்வாக்குடன் திகழ்கின்றது. இந்த மாநில எல்லைகளை இணைக்கும் பல நூறு கிலோமீட்டா பரப்பளவுள்ள மிக அடர்ந்த காட்டுப்பகுதியான 'தண்டகாரண்யா' என்று அழைக்கப்படும் பகுதிதான் மாவோயிஸ்ட்டுகளின் பிரதான செயல்பாட்டுத் தளமாக உள்ளது.

இந்த வனப்பிரதேசத்தில் அவர்களின் பல ஆயுதப்பயிற்சி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த முகாம்களில் நாடு

முழுவதிலுமிருந்து வந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும், அரசியல் மற்றும் ஆயுதப் பயிற்சி பெறுவதுடன், 'கம்யூன்' (கூட்டு) வாழ்க்கையையும் மேற்கொள்கின்றனர். இந்தப் பிரதேசத்தை இப்பொழுது இந்திய ஊடகங்கள் 'சிவப்பு தாழ்வாரம்' என வர்ணித்து வருகின்றன.

இந்தப் காட்டுப் பிரதேசத்தில் வாழ்கின்ற கோண்டு, சான்தால், முண்டா, ராஜ்பான்சி ஆகிய பழங்குடி மக்களை இந்தியாவை ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களுமே தொடர்ச்சியாகப் புறக்கணித்து வந்துள்ளன. அவர்களுக்கு முறையான தொழில்களோ, போக்குவரத்துக்கு சாலை வசதிகளோ, பிள்ளைகள் படிப்பதற்கு பாடசாலைகளோ, உரிய சுகாதார வசதிகளோ வழங்கப்படவில்லை. அவர்கள் காட்டில் கிடைக்கும் கனிகளையும், கிழங்கு வகைகளையுமே தமது பிரதான உணவாக உண்டு தமது வாழ்க்கையைக் கழித்து வந்துள்ளனர்.

அதேநேரத்தில் அவர்கள் தமது பிரதேசத்தில் இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களை விற்றுவிட்டு சில அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக அவற்றை அருகிலுள்ள நகரங்களுக்கு எடுத்துச் சென்றால், அவற்றை அந்த நகர்ப்புற வியாபாரிகள் அடிமாட்டு விலைக்கே வாங்குவார்கள். உதாரணமாக அந்த மக்கள் சேகரிக்கும் புளியை கிலோ ஒரு ரூபா மட்டும் கொடுத்து வாங்கும் நகர வியாபாரிகள், பின்னர் அதை நகரவாசிகளுக்கு 50 முதல் 100 ரூபா வரைக்கு விற்று கொள்ளை இலாபமீட்டுவார்கள்!

அமைதியாக இயற்கையுடன் வாழ்ந்த இந்தப் பழங்குடி மக்களின் வாழ்வில் புயல்வீசக் காரணமாக அமைந்த விடயம், இந்தப் பகுதிகளில் காணப்படும் பல மில்லியன் கோடி ரூபா பெறுமதியான கனிம வளங்கள்தான். இந்தக் கனிம வளங்களை மிகவும் மலிவான விலையில் மத்திய – மாநில அரசுகள் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொம்பனிகளுக்கு விற்று வருகின்றன. இந்தக் கொள்ளைக் கொம்பனிகள் இந்தக் கனிம வளங்களை அகழ்ந்தெடுக்கும் முகமாக இப்பகுதியில் வாழும் பழங்குடி மக்களை பலவந்தமாக அவர்களது நிலங்களில் இருந்து வெளியேற்ற முனைவதுடன், அங்குள்ள சுற்றுச் சூழல்களையும் அழித்து வருகின்றன.

இந்திய அரசாங்கத்தினதும், இந்தப் பகாசுரக் கொம்பனிகளினதும் இந்த அடாவடித்தனமான நடவடிக்கைகளை இங்கு வாழும் மக்கள் எதிர்க்கும் போது, அவர்கள் மீது அரச ஆயுதப் படைகளும், தனிப்பட்ட குண்டர் படைகளும் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகின்றன. இந்தச் சூழ்நிலையில் மக்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவாக மாவோயிஸ்ட்டுகள் போராடி வருகின்றனர். அதன் காரணமாகவே இப்பழங்குடி மக்கள் மாவோயிஸ்ட்டுகளைத் தமது பிள்ளைகள் போலக் கருதி ஆதவளிக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் மாவோயிஸ்ட்டுகளுக்கும், அரச படைகளுக்கும் அடிக்கடி ஆயுத மோதல்கள் நடப்பது கிரமமான நிகழ்ச்சி ஆகியுள்ளது.

அண்மையில் கூட சந்தீஸ்கர் மாநிலத்தில் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, இவ்வருடம் மே மாதம் 25ஆம் திகதி காங்கிரஸ் கட்சி 'பரிவர்த்தன் யாத்ரா' (மாற்றத்துக்கான யாத்திரை) என்றொரு ஊர்வலத்தை அங்கு நடாத்தியது. அந்த ஊர்வலத்தின் மீது மாவோயிஸ்ட்டுகள் 200 பேர் வரை மறைந்திருந்து நடாத்திய தாக்குதலில் முன்னாள் அமைச்சர்கள் உட்பட 27 பேர் பலியாகினர். அதில் முக்கியமானவர் மகேந்திர சர்மா என்பவர். பிரதானமாக இவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த மகேந்திர சர்மா பஸ்தர் என்ற இடத்தில் பெரும் நிலப்பிரபுத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் முதலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) சார்பாக சட்ட மன்ற உறுப்பினராக இருந்தார்! பின்னர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சரானார். அதன் பின்னர் தனது அமைச்சு அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டகாரண்யா பகுதியிலுள்ள கனிம வளங்களைச் சுரண்டுவதற்கு பல கொம்பனிகளுக்கு அனுமதி வழங்கினார். அதற்கு மக்கள் தமது நிலங்களைத் தர மறுத்த போது, குண்டர் படையைக் கொண்டு அவர்களை அடித்து நொறுக்கி அட்டூழியம் செய்தார்.

தமது திட்டங்களுக்கு எதிராக மக்களை மாவோயிஸ்ட்டுகள் தூண்டி விடுகிறார்கள் எனக் கண்ட கொம்பனி முதலாளிகள், ஆளும் காங்கிரஸ் கட்சியினதும், எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியினதும் ஆதரவை நாடின. தமது அரசியல் வேறுபாடுகளை ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் கொம்பனி முதலாளிகளுக்கு உதவ ஓடோடி வந்தன. அதாவது பழங்குடி மக்களுக்கு எதிராகவும், அவர்களுக்காகப் போராடிய மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிராகவும், காங்கிரஸ் – பாரதீய ஜனதா – கொம்பனி முதலாளிகள் என்ற முத்தரப்புக் கூட்டொன்று அமைக்கப்பட்டது.

இந்தக் கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் அதே பழங்குடி மக்களிடமிருந்தே சிலரைப் பொறுக்கியெடுத்து, 'சல்வா ஜூடும்' என்ற பெயரிலான கூலிப்படை ஒன்றை அமைத்து, அந்தக் கூலிகளைக் கொண்டே அவர்களது சொந்த மக்கள் மீது தாக்குதல் நடாத்த ஆரம்பித்தனர். அவர்கள் தமது எஜமானர்களின் உத்தரவுக்கமைய தமது சொந்த மக்களையே சுட்டுக் கொன்றனர். பெண்களை வன்புணர்ச்சி செய்தனர். அந்த மக்களின் வீடுகளுக்கு தீ மூட்டினர். இவ்வாறு அவர்களால் அழிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 640 ஆகும். இந்தக் கூலிப்படையினரின் அட்டூழியம் தாங்கமுடியாமல் காடுகளில் ஓடித் தஞ்சம் புகுந்தவர்களின் எண்ணிக்கை 50 இலட்சம் ஆகும்!

அப்படி ஓடித்தப்ப முடியாதவர்களில் 50 ஆயிரம் பேரைக் கைதுசெய்த கூலிப்படையினர், அவர்களை அரசாங்கம் நடாத்திய 'நிவாரண' முகாம்களில் அடைத்தார்கள். அடைத்து வைக்கப்பட்ட மக்கள் மீதும் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கினர். நிராதரவான அந்த மக்களையும் நூற்றுக்கணக்கில் கொலை செய்து அருகிலிருந்த ஆற்றில் வீசினர். பெண்களையும், சிறுமிகளையும் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கினர். இந்த கேவலம் கெட்ட, அரக்கத்தனமான செயல்களுக்கெல்லாம் தலைமை ஏற்று வழிநடாத்தியவன், முன்னாள் வலது கம்யூனிஸ்ட்டும், இந்நாள் காங்கிரஸ் காரனுமான நிலப்பிரபு மகேந்திர சர்மாதான்!

அவர்களது நடவடிக்கைகளுக்கு பழிவாங்கும் முகமாகவே, அவர்கள் நடாத்திய 'பரிவர்த்தன் யாத்ரா' மீது தாம் தாக்குதல் நடாத்தியதாக மாவோயிஸ்ட்டுகள் தாக்குதலின் பின் தாம் விடுத்த அறிக்கையில் கூறியுள்ளனர். இத்தாக்குதலில் அவர்களது பிரதான குறியான மகேந்திர சர்மாவும், சில முக்கிய காங்கிரஸ் தலைவர்களும் பலியாகினர். தமது தாக்குதலில் சிக்கி மரணமடைந்த சாதாரண காங்கிரஸ் தொண்டர்களுக்கு மாவோயிஸ்ட்டுகள் தமது அனுதாபத்தையும் தெரிவித்துள்ளனர்.

இந்திய மத்திய அரசாங்கமும், பல மாநில அரசுகளும் மாவோயிஸ்ட்டுகளை ஒடுக்கவென பல சிறப்புப் படைகளை அமைத்து, பல கோடி ரூபாவைச் செலவிட்ட போதும்,

மாவோயிஸ்ட்டுகளின் இயக்கம் நாளுக்கு நாள் வளர்ந்து செல்கிறதேயொழிய, பலவீனம் அடைந்ததாகத் தெரியவில்லை. முன்பெல்லாம் 'இந்தியா எதிர்நோக்கும் பிரதான அபாயம் எல்லைக்கு அப்பால் இருந்தே வருகிறது' என, பாகிஸ்தானை நோக்கி இந்திய அரசாங்கம் விரல்களை நீட்டுவது வழமை. ஆனால் சில வருடங்களுக்கு முன்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நாட்டு மக்களுக்கு விடுத்த 'அபாய' அறிவிப்பில், 'தற்போது இந்தியா எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை மாவோயிஸ்ட்டுகளின் பிரச்சினைதான்' எனத் தனது தொனியை மாற்றிக் கூறினார்.

ஆனால் மறுபக்கத்தில் மாவோயிஸ்ட்டுகள் நாளுக்குநாள் பலம் பெற்று வருகின்ற போதிலும், அவர்களால் நாடு தழுவிய ஒரு புரட்சி இயக்கத்தை முன்னெடுத்து, நாட்டின் அரசு இயந்திரத்தைக் கைப்பற்றிவிட முடியுமா என்ற கேள்வி, இந்தியாவின் இடதுசாரி இயக்கங்களின் மத்தியிலும், சர்வதேச இடதுசாரி இயக்கங்கள் மத்தியிலும் தொடர்ச்சியாகக் கேட்கப்பட்டு வருகின்றது.

சீனப்புரட்சியின் போது மாஓ பின்பற்றிய வழிமுறையைப் பின்பற்றுவதாகக் கூறும் இந்திய மாவோயிஸ்ட்டுகள், சீனப்புரட்சிக்கான போராட்டங்கள் நடைபெற்ற 1921 (சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்த ஆண்டு) முதல் 1949 (சீனப்புரட்சி வெற்றிபெற்ற ஆண்டு) வரையிலான காலகட்டத்தில் அந்த நாட்டில நிலவிய சூழ்நிலைக்கும், முதலாளித்து பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக வளர்ந்து வந்த இன்றைய இந்தியாவுக்கும் இடையே எப்படி ஒத்த தன்மைகளைக் காண்கிறார்கள் என்பது பெரும் வாதப் பொருளாக இருக்கின்றது.

அன்றைய சீனா பல்வேறு ஏகாதிபதியங்களால், குறிப்பாக யப்பானிய ஏகாதிபத்தியத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததாலும், பல பகுதிகளில் யுத்தப் பிரபுக்களின் ஆட்சி நிலவியதாலும், பலமான அரசொன்று இல்லாத நிலை அங்கு இருந்தது. அந்த பலவீனமான சூழல், சீனக் கம்யூனிஸ்ட்டுகளின் புரட்சிப் போராட்டங்களுக்கு ஒரு அனுகூலமான நிலையைத் தோற்றுவித்திருந்தது. இன்றைய இந்தியாவோ, வேகமான பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக இருப்பதுடன், பிராந்திய வல்லரசாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த நிலைமை மட்டுமின்றி, இந்தியாவில் நிலவுகின்ற அரைகுறை ஜனநாயகமும் இந்தியப் புரட்சிக்கான எதிர்மறையான நிலைமைகளாக இருக்கின்றன.

இந்த சூழ்நிலையில் சுமார் 100 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில், சில இலட்சங்கள் சனத்தொகை கொண்ட பழங்குடி மக்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தேசம் தழுவிய புரட்சியொன்றை மாவோயிஸ்ட்டுகளால் நடாத்த முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

இந்தியாவை விட மிகவும் பின்தங்கிய நேபாளத்தில், அங்குள்ள மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பல வருடங்களாக பலமான ஆயுதப் போராட்டம் நடாத்தி, நாட்டின் மூன்றிலொரு பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. ஆனால் இன்றைய சர்வதேச அரசியல் நிலைமைகள் அவர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்காததால், அவர்கள் ஐ.நாவின் மேற்பார்வையில் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, பாராளுமன்றப் பாதைக்குத் திரும்ப வேண்டி ஏற்பட்டது. (நேபாள கம்யூனிஸ்ட்டுகளின் இந்த புத்திசாலித்தனமான முடிவை இலங்கையில் புலிகள் எடுக்கத் தவறியதால், அவர்கள் முற்றுமுழுதாக அழிய வேண்டிய நிலை ஏற்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது)

இந்திய மாவோயிஸ்ட்டுகள் தமது சொந்த நாட்டின் ஸ்தூலமான நிலைமைகளை சரியாகக் கணிப்பிடத் தவிறியுள்ளனரோ என்ற ஐயப்பாடு இன்று பலருக்கும் இருக்கின்றது. அவர்கள் தமது நாட்டின் நிலைமைகளை மட்டுமின்றி, தமது மிக அண்டை நாடான – சுமார் 20 மைல் தூரத்திலுள்ள இலங்கையின் நிலவரங்களையும் கூட தவறாக எடை போட்டுள்ளனர். அதன் காரணமாக, ஏகாதிபத்தியத்துக்கு மிகவும் சார்பான, வெறும் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட, பாசிச நடைமுறைகளைக் கைக்கொண்ட புலிகளை ஒரு விடுதலை இயக்கமாகக் கருதி, அவர்களுடன் ஆயுதப் பரிமாற்றம், ஆயுதப் பயிற்சி போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்திருப்பதை அவர்களே ஒத்துக் கொண்டிருக்கின்றனர். இது எவ்வளவு மாபெரும் தவறு!



இதேபோன்ற ஒரு தவறை, நேபாள மாவோயிஸ்ட்டுகளும் செய்திருக்கின்றனர் என்பதை, சமீபத்தில் அக்கட்சியின் தலைவர் பிரசந்தா ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிய வந்தது. ஓர் இயக்கத்தின் சித்தாந்த அடிப்படை, அது பின்பற்றும் கொள்கை, அதன் செயற்பாட்டு வழிமுறை என்பவற்றைக் கணக்கில் எடுக்காது, ஆயுதம் தூக்கினால் மட்டும் அந்த இயக்கம் புரட்சிகர இயக்கம் என்ற கண்மூடித்தனமான போக்கே இந்த இரு மாவோயிசக் கட்சிகளினதும் புலிகள் பற்றிய அணுகுமுறைக்குக் காரணமாகும்.

குறைந்த பட்சம், புலிகள் பற்றிய நிலைப்பாடொன்றை எடுப்பதற்கு முதல், அந்த இரு கட்சிகளும் இலங்கையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் அபிப்பிராயத்தைத் தன்னும் பெற்றிருக்க வேண்டும். உலகில் இன்று தொடர்ந்தும் சோசலிச நாடுகளாக இருக்கும் சீனா, கியூபா, வியட்நாம், வட கொரியா என்பனவும், வெனிசூலா உட்பட

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# தேர்தல் காய்ச்சலால் இலங்கைச் சன்னி கண்டிருக்கும் ப.சிதம்பரம்!



“பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று அங்கு தமிழ்த் தலைவர்களைச் சந்திப்பார்!”

“காங்கிரஸ் கட்சி மட்டுமே இலங்கைத் தமிழர்களின் நலனில் அக்கறையுள்ள ஒரே கட்சி!!”

இலங்கைத் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறும்வரை நாம் ஓய்ந்திருக்கமாட்டோம்!!!

“மனித உரிமையை மீறியவர்களை இலங்கை கட்டாயமாகத் தண்டித்தே ஆக வேண்டும்!!!!”

இவை நொவெம்பர் மாதக் கடைசியில் இந்திய ஊடகங்களை அலங்கரித்த தலைப்புச் செய்திகளாகும்.

இந்திய ஊடகங்கள் இந்தச் செய்திகளுக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுத்ததிற்குக் காரணம், அவை வழமையான தமிழக திராவிடக் கட்சிகளிடமிருந்து வராமல், வேறு ஒரு இடத்தில் இருந்து வந்தமையினாலாகும். ஆம், இவற்றைக் கூறியவர் வழமைக்கு மாறாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய நிதியமைச்சருமான ப.சிதம்பரம்!

சென்னையில் காங்கிரஸ் கட்சி சார்பில் அல்லாமல் தனிப்பட்ட முறையில் தான் நடாத்திய “இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதார உரிமையும், இந்தியாவின் நிலைப்பாடும்” என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பேசும்போதே சிதம்பரம் இவ்வாறான கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

‘எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறி விழுந்தார்’ என்றொரு தமிழ் வழக்கு உள்ளது. அதாவது, விண்ணாதி விண்ணர்கள் எல்லாம் சாதிக்க முடியாத ஒரு விடயத்தை, ஒரு லாயக்குமல்லாத ஒருவரும் முயன்று பார்த்து தோல்வி அடைந்தார் என்பது அதன் அர்த்தம். அதுபோல ப.சிதம்பரமும் இப்பொழுது தமிழ் தேசியம் என்ற அந்தக் குதிரையில் ஏற முயன்று பார்த்திருக்கிறார். சிதம்பரத்தின் முடிவு எவ்வாறாக இருக்கும் என்பதை இங்கு தனியாக விளக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் சிதம்பரத்துக்கு திடீரென்று ஏன் இந்த ‘ஞானோதயம்’ ஏற்பட்டது என்பதுதான் கேள்வி.

ஏனெனில், பா.சிதம்பரம் நீண்டகாலமாக அங்கம் வகிக்கின்ற காங்கிரஸ் கட்சி, இலங்கை இனப்பிரச்சினையில் ஆரம்பம் முதல் இன்று வரை முக்கியமான பங்கு வகித்து வருகின்றது என்பது அவர் அறியாத விடயமல்ல. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கான ஒரு குறைந்தபட்ச தீர்வாகத்தன்னும் கருதப்படும் ‘இந்திய – இலங்கை ஒப்பந்தம்’ காங்கிரஸ் கட்சியின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது என்பது, ஒரு வரலாற்று நிகழ்வாகிவிட்டது. அந்த ஒப்பந்தத்திற்கு மேலாக இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக புதியவை எதனையும் இன்றுவரை வைக்கவும் இல்லை.

அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற இலங்கை வந்த இந்திய அமைதிப்படை வீரர்களில் ஏறத்தாழ 1,500 பேரை புலிகள் கொன்றொழித்ததுடன், அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ராஜீவ் காந்தியையும் மனித வெடிகுண்டு மூலம் மிலேச்சத்தனமாகக் கொன்றொழித்தனர். அதன் பின்னரான காலத்தில் காங்கிரஸ் அரசுகள் மட்டுமின்றி, அனைத்து இந்திய அரசுகளுமே இலங்கைத் தமிழர் பிரச்சினையிலிருந்து தம்மை எட்ட வைத்துக் கொண்டன.

அதேநேரத்தில் இலங்கை அரசுடனான போரில் புலிகள் மேல்நிலை எடுப்பதையும் இந்திய அரசுகள் எவையும் விரும்பவுமில்லை. புலிகளின் வளர்ச்சி இலங்கை அரசுக்கு மட்டுமின்றி, இந்தியாவுக்கும், இந்தப் பிராந்தியத்துக்கும் கூட ஆபத்தானது என்பதே அதற்குக் காரணமாகும். புலிகள் மேற்கு ஏகாதிபத்திய சக்திகளின் கைக்கூலிகள் என்பதையும், இலங்கையில் புலிகளின் தலைமையில் ஒரு தனிநாடு உருவாகுமானால், அது மத்திய கிழக்கில் இஸ்ரேல் அமைந்ததிற்குச் சமமாகும் என்பதையும் இந்தியா நன்குணர்ந்திருந்தது. அத்துடன் புலிகளினால் ஏற்படும் தாக்கத்தினால், தமிழ்நாட்டில் மீண்டும் பிரிவினைவாதம் தீவிரமாகத் தலைதூக்கும் என்பதுவும் இந்தியாவின் அச்சமாகும்.

அதனால்தான், இந்தியா இலங்கைப் பிரச்சினையில் சிறிது காலம் நேரடியாக ஈடுபாடு காட்டாமல் இருந்தபோதும், புலிகள் ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கி அழித்து, யாழ்நகரைக் கைப்பற்றுவதற்காக அரியாலை வரை முன்னேறிய போது, இலங்கை இராணுவம் செயல்திறன் இழந்து நின்ற சூழ்நிலையில், இந்தியா மறைமுகமாக எச்சரிக்கை விடுத்து புலிகளை முகமாலை வரை பின்வாங்கிப் போக வைத்தது. அதன் பின்னர்தான், இந்திய அரசு, புலிகள் இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் வைத்துத் தோற்கடிக்கப்படும் வரை, இலங்கை அரசுக்கு சகலவிதமான உதவிகளையும் வழங்கியது.

உண்மையில் புலிகள் மீதான இலங்கை அரசின் வெற்றி என்பது வெறுமனே அதனுடையது மட்டுமல்ல, அது இந்திய அரசினதுமாகும். புலிகளை அழித்ததன் மூலம் இலங்கை தனது பாதுகாப்பை மட்டுமல்லாது, இந்தியாவின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியது. அதன் காரணமாக இந்திய அரசு என்றென்றும் இலங்கைக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவங்கள் நடந்தபோதெல்லாம், ப.சிதம்பரம் இந்திய அமைச்சரவையின் சிரேஸ்ட அமைச்சர்களில் ஒருவராகத்தான் இருந்தார். புலிகளுக்கு எதிரான போரில் இந்தியா, இலங்கைக்கு உதவக்கூடாது என பா.சிதம்பரம் ஒருபோதும் கூறவில்லை. போரில் சிக்கி அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக இறக்கிறார்கள் எனவும் கூட அவர் கூறவில்லை. ஆனால் இப்பொழுது மட்டும் இலங்கையின் 'போர்க்குற்றங்கள்' பற்றி அவருக்கு திடீரென ஞானோதயம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

பதில் மிகவும் இலேசானது. அது வேறு ஒன்றும் அல்ல. ஒரு சராசரி அரசியல்வாதிக்கு வரும் தேர்தல் காய்ச்சல்தான்.

2014இல் இந்தியப் பாராளுமன்றத்துக்கு பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. காங்கிரஸ் கட்சி தலைமைதாங்கும் மத்திய அரசும், அதனுடன் கூட்டு வைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் இலங்கைத் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்து அவர்களது அழிவுக்குக் காரணமாக இருந்துள்ளன என, தமிழகத்திலுள்ள புலி ஆதரவுச் சக்திகளால் கடந்த நான்கு வருடங்களாகச் செய்து வந்த பிரச்சாரத்தால், திமுகவும், காங்கிரசும் ஆடிப்போயுள்ளன. அதன் காரணமாகவே, தேர்தல் வீழ்ச்சியிலிருந்து தப்பும் ஒரு தந்திரமாக, கருணாநிதி (இலங்கைத் தமிழர்கள் அழியும் வரை இருந்துவிட்டு) கடைசி நேரத்தில் அரசாங்கத்திலிருந்து தனது கட்சியை விலக்கிக் கொண்டார்.

இந்த நிலைமையில் தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரரான ப.சிதம்பரத்தின் நிலை இன்னும் மோசமானது. அவர் கடந்த தேர்தலில் சிவகங்கைத் தொகுதியில் போட்டியிட்டு மயிரிழையில் 'வெற்றி' பெற்றார். ஆனால் அந்த வெற்றி கூட மோசடியாகப் பெறப்பட்டது எனக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. முதலமைச்சர் ஜெயலலிதாவே பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். அவரது வெற்றியை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன் கடந்த சில மாதங்களாக இந்திய ரூபாயின் மதிப்பு மிக மோசமாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. அதன் காரணமாக விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கின்றன. அதனால் மக்கள் காங்கிரஸ் அரசின் மீதும், குறிப்பாக அவ்வரசின் நிதியமைச்சரான சிதம்பரம் மீதும் வெஞ்சினம் கொண்டுள்ளனர். இவையெல்லாம் அடுத்த பொதுத்தேர்தலில் காங்கிரசின் வெற்றி வாய்ப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளன. குறிப்பாக, தமிழகத்தில் காங்கிரசின் எதிர்காலமும், கூடவே சிதம்பரத்தின் வெற்றி வாய்ப்பும் கேள்விக்குறிக்கும் அப்பால், அதலபாதாளத்தில் சென்றுவிட்டன.

இந்த நிலைமையில் ஏதாவது மாற்றம் ஏற்படுத்த முடியுமா என்ற நப்பாசையில்தான், அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக்கூடாது என, தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், வாசன், நாராயணசாமி போன்றோர் நிர்ப்பந்தம் செய்து பிரதமரைத் தடுத்தனர். அந்த நோக்கத்தில்தான், ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் யுத்தத்தில் மடிந்த போது ஒரு சொல் வருத்தம் கூடத் தெரிவிக்காத சிதம்பரம், புலிகளின் வானொலி அறிவிப்பாளரான லெப்.கேணல் இசைப்பிரியாவின் மரணத்துக்கு நீலிக்கண்ணீர் விட்டார்.

அந்த வரிசையில்தான், இப்பொழுது சென்னையில் தானே ஒரு கருத்தரங்கு நடாத்தி, இலங்கையை வாங்கு வாங்கு என்று வாங்கியிருக்கிறார். அந்த மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநிலக் கமிட்டியின் தலைவர் ஞானதேசிகனோ அல்லது மத்திய அமைச்சர்களான வாசன், நாராயணசாமி போன்றோரோ, இதர தமிழக காங்கிரஸ் தலைவர்களோ பங்கேற்கவில்லை. சிதம்பரமும் அவரது மகன் கார்த்திக் சிதம்பரமும் (இளைஞரணி செயலாளர்) மட்டுமே பங்கேற்றனர். அப்பனும் மகனும் பங்கேற்றதிலிருந்தே, அது தனது தனிப்பட்ட தேவைக்காக, அதாவது தேர்தல் வெற்றிக்காக, சிதம்பரத்தால் கூட்டப்பட்ட கருத்தரங்கு என்பது தெளிவாகிறது.

சிதம்பரம் போன்றவர்கள் என்னதான் தமது வேசத்தை மாற்றினாலும், வருகின்ற பொதுத் தேர்தலில் தமிழக மக்கள் அவர் போன்றவர்களுக்குத் தகுந்த பாடம் படிப்பிப்பது நிச்சயம்.

இலங்கையிலுள்ள எந்தவொரு கட்சியும் இந்தியாவையோ அல்லது தமிழகத்தையோ காட்டித் தமது தேர்தல் வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்வதில்லை. ஆனால் கேவலம், தமிழக அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் இலங்கைத் தமிழர்களையும், இலங்கை அரசையும் வைத்தே தமது அரசியல் பிழைப்பை நடாத்துகின்றன.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

13ம் பக்கத்தொடர்ச்சி...

தற்செயலாக இலங்கையில் தமிழர்கள் இல்லாமலிருந்தால், மலேசியா அல்லது சிங்கப்பூர் தமிழர்களையோ, அதுவுமில்லாவிட்டால் கனடாவில் அல்லது இங்கிலாந்தில் வாழும் தமிழர்களையோ வைத்தாவது தமது பிழைப்பைத் தொடரத் தயங்கமாட்டார்கள் என்பது மட்டும் திண்ணம்.

'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் பெறும், இறந்தாலும் ஆயிரம் பொன் பெறும்' என்பது போல, இந்த தமிழக அரசியல்வாதிகள் இலங்கையை நட்பாக வைத்தும் பிழைத்திருக்கிறார்கள், அதை வசைபாடியும் பிழைக்கிறார்கள் என்பதுதான் வரலாறாக இருக்கின்றது.

**- தியோடர்**

11ம் பக்கத்தொடர்ச்சி...

பல முற்போக்கு – ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளும், உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளும், புலிகள் ஒரு பாசிச அமைப்பு என எடுத்திருந்த சரியான முடிவை, அருகிலுள்ள இந்திய – நேபாள மாவோயிஸ்ட் கட்சிகள் எடுக்காதது, மிகவும் கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதும் ஆகும்.

எனவே, இந்தியாவில் தம்மை கம்யூனிஸ்ட்டுகள் என்று சொல்லிக்கொண்டு, சந்தர்ப்பவாத ஓட்டுப் பொறுக்கி அரசியலை நடாத்துகின்ற கட்சிகளை விட, உண்மையாகவே மக்களுக்காப் போராடுபவர்கள் என்ற ரீதியில், மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட்டுகள் தமது நாட்டின் யதார்த்தபூர்வமான நிலைமைகளைச் சரியாக எடைபோட்டு வேலை செய்வது அவசியமானது. அப்பொழுதுதான் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்த காலத்திலிருந்து, இன்றைய 'சுதந்திர' இந்தியா வரையிலான காலம் வரை, மக்களின் விடுதலைக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்த பல இலட்சக்கணக்கான கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களுக்கும், கோடானுகோடி மக்களுக்கும் உண்மையான அஞ்சலியைச் செலுத்துவதாக இருக்கும்.

**– சுப்பராயன்**

"பொருளைப் பற்றிய கருத்தோட்டம் குறிக்கிறதெல்லாம், நம் புலனுணர்ச்சிகள் மூலமாக நாம் அறியும் புறநிலை யதார்த்தத்தைத்தானே ஒழிய வேறெதையுமில்லை"

**– 'பொருள்முதல்வாதமும் அனுபவஞான விமர்சனமும்' என்ற நூலில் லெனின்**

"இயங்கிக் கொண்டிருக்கும் பொருளைத் தவிர உலகில் வேறொன்றும் இல்லை. அந்த இயங்கும் பொருள் காலத்திலும் களத்திலும்தான் இருந்து இயங்க முடியுமேயல்லாமல், வேறெந்த ரீதியிலும் இயங்க முடியாது".

**– 'பொருள்முதல்வாதமும் அனுபவஞான விமர்சனமும்' என்ற நூலில் லெனின்**

"இயக்கம் என்பது பொருளின் வாழும் தன்மையாகும். வாழ்க்கை முறையாகும். இயக்கமற்ற பொருளைப்பற்றி எப்படிச் சிந்தித்துப் பார்க்கவும் முடியாதோ, அதேபோல் பொருள் அற்ற இயக்கத்தைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்கவே முடியாது".

**– 'டூரிங்குக்கு மறுப்பு' என்ற நூலில் ஏங்கெல்ஸ்**

முன்பக்கத்தொடர்ச்சி...

கேள்விக்கு உட்படுத்தப்படாத ஒரு ஏகபோக நிலையை எடுத்தது. அதன்காரணமாக, தமிழ் மக்கள் மத்தியில் அதுவரை காலமும் நிலவி வந்த முதலாளித்துவ பல கட்சி ஜனநாயக முறைக்குக்கூட முடிவு கட்டப்பட்டது.

அதன் பின்னர், 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு, தமிழ் மக்கள் மேல் மேற்கொண்ட இராணுவ ஒடுக்குமுறை காரணமாக தமிழ் இளைஞர் இயக்கங்களின் ஆயுதப்போராட்டம் ஆரம்பமானது. இந்தப் போராட்டத்தின் ஊடாக மீண்டும் தமிழர் அரசியலில் தமிழ் இனவாத வலதுசாரி அணிகளும், உண்மையான முற்போக்கு கண்ணோட்டத்துடன் கூடிய தமிழ் தேசியவாத அணிகளும் உருவாகின. ஆனால் ஏகாதிபத்தியவாத சக்திகளும், தமிழகத்தின் தமிழ் இனவாத சக்திகளும், ஆர்.பிரேமதாச தலைமையிலான பிற்போக்கு ஐ.தே.க அரசும் இணைந்து, பாசிசவாத சக்திகளான புலிகள் மூலம் அனைத்து முற்போக்கு தமிழ் தேசியவாத சக்திகளையும் அழித்துவிட்டனர்.

அதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டுமொருமுறை எழுந்த மாற்று அரசியல் சக்திகளை ஒடுக்கிவிட்டனர். அதற்குப் பின்னர், 2009இல் புலிகள் அழிக்கப்படும் வரை, தமிழ் அரசியலில் பாரம்பரிய முதலாளித்துவ சக்திகளின் இடத்தை, அவற்றிலிருந்து உருவான தமிழ் பாசிச சக்திகள் புலிகளின் தலைமையில் எடுத்துக் கொண்டன.

2009 மே மாதம் பாசிசப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர், தமிழ் அரசியல் சூழலில் ஒரு ஜனநாயக இடைவெளி ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில தமிழ் ஜனநாயக சக்திகள் 'தமிழ் கட்சிகளின் அரங்கம்' என்ற கருத்துப் பரிமாற்ற களமொன்றை உருவாக்கினர். அந்த அரங்கு ஓரளவு பரந்தளவிலான தமிழ் ஜனநாயக சக்திகளைப் பிரதிநித்துவப்படுத்தியதுடன், ஒரு ஐக்கியப்பட்ட செயற்பாட்டு அமைப்பாகவும் மாறக்கூடிய சூழ்நிலை இருந்தது. ஆனால் பிற்போக்கு சக்திகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே.கவின் தமிழ் முகவரான மனோகணேசன் போன்றோர் அதற்குள் நுழைத்து, அதன் செயற்பாட்டைச் சீர்குலைத்து, அந்த அரங்கையே இல்லாமல் செய்துவிட்டனர். அதன் மூலம் மூன்றாவது தடவையாகவும், தமிழ் அரசியலில் மாற்று அணி உருவாகாமல் பிற்போக்கு சக்திகள் தடுத்துவிட்டன.

இவ்வாறு காலத்துக்காலம், தமிழ் மக்கள் மத்தியில் உருவாகி வந்த, மாற்று ஜனநாயக சக்திகளின் அமைப்புகளை, தமிழ் இனவாத – பிற்போக்கு சக்திகள் திட்டமிட்டு நிர்மூலம் செய்து வந்துள்ளனர்.

அதன் பின்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாகத் தனக்குத்தானே முடிசூடிக் கொண்டது. அதன் விளைவாக கடந்த வட மாகாணசபைத் தேர்தலில் மக்கள் அவர்களை பெருமளவுக்கு ஆதிரிக்கும் சூழலும் உருவானது. ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு மிகக் குறுகிய காலத்திலேயே உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக அமைந்த வட மாகாணசபையின் பணிகள் பற்றி ஒரு முடிவுக்கு வர மூன்று மாதகால அவகாசம் போதாது என்ற போதிலும், 'முதல் கோணல் முற்றிலும் கோணல்' என்பது போல, அதன் ஆரம்ப செயற்பாடுகளே, அதன் திசை விலகலை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரச எதிர்ப்பையே தனது ஒரே

குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவதால், அதனால் எதையும். பெரிதாகச் சாதிக்க முடியாது என்பது சாதாரணமாகத் தமிழ் மக்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அரசாங்கத்தின் மீது இருந்த அதிருப்தியாலும், முதலமைச்சர் விக்னேஸ்வரன் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட, கை சுத்தமான புதியவர் என்ற நினைப்பினாலும், அவர் தலைமையிலான வட மாகாணசபை ஒருசில நடவடிக்கைகளையாவது மக்களுக்காகச் செய்யும் என்ற எதிர்பார்ப்புக் காரணமாகவே மக்கள் அவருக்கு ஆதரவளித்து அவரைப் பதவியில் இருத்தினர்.

ஆனால் மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும் வகையிலேயே வட மாகாணசபையின் நடவடிக்கைகள் மட்டுமின்றி, முதலமைச்சர் விக்னேஸ்வரனின் நடவடிக்கைகளும் இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இதைத்தான் பன்றியோட சேர்ந்த பசுக்கன்றும் அதன் தீய பழக்கத்துக்கு உள்ளாகிவிடும் என்று நமது முன்னோர்கள் சொன்னார்களோ தெரியாது.

தமிழினத்தின் விடிவு ஒன்றே தமது ஒரே நோக்கம் என்று சொல்லி மக்களிடம் வாக்குக் கேட்டவர்கள், தேர்தல் முடிந்ததும், சந்தி சிரிக்கும் வகையில் மந்திரிப் பதவிகளுக்காக அடிபடத் தொடங்கினர். அதன் காரணமாக மாகாணசபைக்குள்ளும், அதனை நிர்வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் கோஸ்டிகளும், குழுக்களும் தோன்றியுள்ளன. அந்தக் கோஸ்டிகள் மாகாணசபையின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். ஏற்கெனவே விக்கினேஸ்வரன் தலைமையிலான வட மாகாணசபையின் செயற்பாடுகளைக் குழிபறிக்கவெனத் திட்டமிட்டுச் செயற்படும், கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிறீதரன் போன்றவர்களின் செயற்பாடுகளுடன், இந்த பதவிப் பிரியர்களின் செயற்பாடும் இணைந்து மாகாணசபையை செயலற்ற நிலைக்குத் தள்ளியுள்ளது.

இந்த நிலைமையை எதிர்கொள்வதில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஒரு ஆரோக்கியமான நிலையை எடுத்துச் செயற்படுவார் என்ற எதிர்பார்ப்பு, வட பகுதி மக்களின் நலனில் அக்கறையுள்ள பலருக்கு இருந்தது. ஆனால் ஆரம்பத்தில் சில விடயங்களிலாவது ஆரோக்கியமான ஒரு நிலையை எடுத்து வந்த விக்னேஸ்வரன், இப்பொழுது முற்றுமுழுதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இனவாதச் சேற்றுக்குள் விழுந்து அவர்களது அநாகரிகமான பாணியில் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. பிரச்சினைகளுக்கு உரிய முறையில் முகம் கொடுத்துத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, மக்களைத் திசை திருப்பும் கீழ்த்தரமான, வழமையாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்துவரும் அரசியல் வழிமுறையையே அவரும் கைக்கொள்ள ஆரம்பித்துள்ளார்.

அவர் தற்பொழுது மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், அனுகூலங்களை அடிப்படையாக வைத்துத் தனது மக்களுக்கான சேவையை ஆரம்பிப்பதை விடுத்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலத்தில் அரசுடன் மோதுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செய்து வந்த அழிவு அரசியலான, வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது, வலி வடக்கில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை இல்லாதொழிப்பது, வட மாகாண ஆளுநரை மாற்றுவது போன்ற, உடனடித் தேவைகளற்ற, அரசுடன் வலிந்து மோதலை உருவாக்குகின்ற நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

இந்தப் பிரச்சினைகள் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினைகள் என்பதில், தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி, சிங்கள முற்போக்கு சக்திகளுக்கும் கருத்தொருமைப்பாடு உண்டு. ஆனால் புதிதாக உருவான மாகாணசபை ஒன்று தனது செயற்பாடுகளை தேவையற்ற விதண்டாவாதத்துடன் தொடங்குவதா என்ற கேள்வி பலர் மத்தியில் உருவாகியுள்ளது. மாடுகளை வண்டிக்கு முன்னால் பூட்ட வேண்டுமேயொழிய, வண்டியை மாடுகளுக்கு முன்னால் பூட்டினால், வண்டி ஒருபோதும் நகராது. இது முன்னாள் நீதியரசருக்குத் தெரியவில்லையா அல்லது "சேராத இடம் சேர்ந்து துன்பத்தில் விழுந்தாயடா!" என்ற கதையோ தெரியவில்லை.

அரச எதிர்ப்பு, உள்முரண்பாடு என்பன காரணமாக வட மாகாணசபை மக்களின் அவநம்பிக்கையைப் பெறத் தொடங்கியுள்ளதைப் பார்த்தால், முதலமைச்சர் விக்னேஸ்வரன் "போதுமடா சாமி" எனக்கூறி தனது பதவியை துறந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. சில வேளைகளில் அவரது அணியைச் சேர்ந்தவர்களே அவர் நிர்வாகத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை ஏற்கெனவே வடக்கு கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள இரண்டு பிரதேச சபைகளிலும், ஒரு நகர சபையிலும் அவர்களது அணியைச் சேர்ந்தவர்களே வரவு செலவுத் திட்டங்களைத் தோற்கடித்து, அச்சபைகளை இயங்கவிடாது முட்டுக்கட்டை போட்டுள்ளனர். அத்துடன் கூட்டமைப்பு நிர்வாகத்தின் கீழ் உள்ள பல உள்ளூராட்சி சபைகளுக்கு கடந்த வருடங்களில் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதி, மக்கள் நலத்திட்டங்களுக்காக செலவழிக்கப்படாது திறைசேரிக்குத் திரும்பிச் சென்றுள்ளது. இந்த இலட்சணத்தில் வட மாகாணசபைக்கு அரசால் ஒதுக்கப்பட்ட நிதி போதாது என்றும் விக்னேஸ்வரன் குறை வேறு கூறியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசாங்கம் வடக்கில் முனனெடுத்த பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம், மாகாணசபைத் தேர்தல் நடந்து புதிய மாகாணசபை அமைந்த பின்னர் நின்றுபோயுள்ளன. இனி மாகாணசபையும், அரசாங்கமும் அதற்காக ஆளைஆள் குற்றஞ்சாட்டும் நிலைமை உருவாகாலாம். இதனால் உண்மையில் மக்களுக்குத்தான் பாரிய இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இப்பொழுதாவது மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பை வெற்றிபெற வைத்துத் தாம் இழைத்த பாரிய தவறை மக்கள் உணர வேண்டியது அவசியம்.

அதேவேளையில், தமிழ் மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு – ஜனநாயக சக்திகள் முன்னெப்போதையையும் விட, ஊக்கமாகச் செயற்பட வேண்டிய காலம் இதுதான். அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வங்குரோத்து அரசியல் பற்றியும், அதனால் நிர்வகிக்கப்படும் வட மாகாணசபையின் கையாலாகத்தனம் பற்றியும், தமிழ் மக்கள் மத்தியில் பட்டிதொட்டி எங்கும் சென்று விரிவாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும். அதற்கு முன்னோடியாக தமிழ் முற்போக்கு – ஜனநாயக சக்திகள் தமது கடந்த காலத் தவறுகள் குறித்து கூட்டாகவும், மனப்பூர்வமாகவும் தமக்குள் கலந்துரையாடி, தம்மை ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாக உருவாக்க வேண்டும்.

இந்த வகையில் செயற்படாமல், தற்பொழுது உள்ள உதிரித்தனமான முறையில் தொடர்ந்தும் செயற்பட்டால், தொடர்ந்தும் மக்களுக்கு அழிவுப்பாதையே காட்டிவரும் பிற்போக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பை தமிழர் அரசியலில் இருந்து தூக்கி எறிவது கடினம். இந்த உண்மையை காலம் கடந்தாவது தமிழ் முற்போக்கு – ஜனநாயக சக்திகள் உணர்ந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும். *

'ஒரு எளிய தொடக்கத்திலிருந்து எண்ணில் அடங்கா வடிவங்களில் அழகானவையும், அற்புதமானவையும் பரிணமித்தன, பரிணமித்துக்கொண்டு இருக்கின்றன என்ற உயிர் பற்றிய இந்தப் பார்வைதான் எத்தனை விசாலமானது.' – **சார்லஸ் டார்வின்**

## கடைசிப் பக்க குறிப்புகள்:

# தமிழக எழுத்தாளர்கள் சிலரின் சில்மிசங்கள்!

அண்மையில் ஒரு தமிழக எழுத்தாளர் ஒருவரின் சிறுகதைத் தொகுதி ஒன்று படிக்கக் கிடைத்தது.

அதில் ஒரு கதையில் இலங்கைத் தமிழர் ஒருவரின் உரையாடல் இடம் பெறுகிறது. அவர் தனது உரையாடலில் ஓர் இடத்தில், "நாங்கள்" என்றொரு சொல்லைப் பயன்படுத்துகிறார். 'அந்த வார்த்தையை "நாம்" என்று மொழிபெயர்த்து வாசிக்க வேண்டும்' என எழுத்தாளர் குறிப்பிடுகிறார்.

"நான்" என்ற ஒருமைச் சொல்லுக்கு, "நாங்கள்", "நாம்" என்ற பன்மைச் சொற்கள் வழக்கத்தில் உள்ளன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்த இரண்டு சொற்களுக்குமிடையில் யுவன் சந்திரசேகர் என்ன வேறுபாட்டைக் கண்டுபிடித்துள்ளார் என்று தெரியவில்லை. "நாங்கள்" என்ற சொல் தமிழ் சொல் இல்லை என்று கருதுகிறாரா அல்லது அந்தச் சொல் தமிழகத்தில் பாவனையில் இல்லை என்று கருதுகிறாரோ தெரியவில்லை. அவர்தான் இதற்கு விளக்கம் தர வேண்டும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, தமிழக எழுத்தாளர்களின் இந்த அகங்காரப்போக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

ஏற்கெனவே 1950களிலும் இதையொத்த ஒரு பிரச்சினை ஏற்பட்டது. அப்பொழுது தமிழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'கங்கை' என்ற இதழின் ஆசிரியர் பகீரதன் என்பவர், "இலங்கை எழுத்தாளர்கள் தமிழக எழுத்தாளர்களை விட 10 ஆண்டுகள் பின்தங்கி இருக்கிறார்கள்" என்றொரு குண்டைத் தூக்கிப் போட்டார். அவரது கூற்றுக்கு எதிராக இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது.

அதுமாத்திரமின்றி, அவருடைய அகங்காரத்தனமான பேச்சுக்கு சவால் விடுவது போல, இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரான சுபைர் இளங்கீரன், 'நீதியே நீ கேள்' என்ற தலைப்பிலான அருமையான நாவல் ஒன்றை 'தினகரன்' வாரமலரில் எழுதி அநேகரினதும் பெருத்த வரவேற்பைப் பெற்றார். (அப்பொழுது க.கைலாசபதி தினகரன் பிரதம ஆசிரியராக இருந்தார்) பின்னர் அது நூலுருவிலும் வெளிவந்து வந்து அமோகமாக விற்பனையானது.

பின்னர் இதுபோன்ற ஒரு பிரச்சினை 60களிலும் உருவானது. அப்பொழுது 'கலைமகள்' இதழின் ஆசிரியராக இருந்த கி.வா.ஜகநாதன் ஒருமுறை பேசும் போது, 'இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துக்கு அடிக்குறிப்புப் போட வேண்டும்' எனக் கூறினார். இதன் அர்த்தம், இலங்கை எழுத்தாளர்களின் தமிழ் சரியானது, சுத்தமானது அல்ல என்பதாகும். அவரது இந்தக் கூற்றுக்கும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

அதுமாத்திரமின்றி, அதன்பின்னர் அவர் யாழ்ப்பாணத்துக்கு ஒருமுறை வந்தபொழுது, அவருக்கு நேரிலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அவருக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பிராமண அமைப்பு ஒன்று யாழ்.நாவலர் பாடசாலையில் வரவேற்பு வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்தது. வைபவத்துக்கு அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியர் கே.பி.ஹரன் (ஐயர்) தலைமை வகித்தார். இந்த நிகழ்வின் போது, கி.வா.ஜவின் இலங்கைத் தமிழ் பற்றிய அவமதிப்புக்கு தமிழ் இளைஞர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுக் கலாட்டா செய்தனர். அதனால் அவருக்கான வரவேற்பு வைபவம் ரத்துச் செய்யப்பட்டது.

1970இற்கு முன்பு தமிழக – இலங்கை தமிழிலக்கியத் தொடர்பு என்பது ஒருவழிப்பாதையாகத்தான் இருந்தது. தமிழகத்திலிருந்து வெளியான மூன்றாம் தர, நான்காம் தர குப்பை வெளியீடுகள் இலங்கையில் வந்து குவிந்த அதேநேரம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் வெளியீடுகளை தமிழகத்தவர்கள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அதன் பின்னர் 1970இல் பதவிக்கு வந்த சிறீலங்கா – சமசமாஜ – கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் தமிழகக் குப்பை வெளியீடுகளின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக்கு தடை விதித்து, இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் முயற்சிகளுக்கு உள்நாட்டில் விற்பனை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்த பின்னரே, தமிழகத்தவர்களின் போக்கில் வேண்டாவெறுப்பாகச் சிறிது மாற்றம் ஏற்பட்டது.

இன்றும்கூட, தமிழகத்தில் வெளியிடப்படும் இலங்கை எழுத்தாளர்கள் யாரென்று பார்த்தால், அவர்கள் புலம்பெயர் ஈழத்து எழுத்தாளர்களாகத்தான் இருப்பார்கள். அதற்குக் காரணம் அவர்களிடம் இருக்கும் டொலர்களும், யூரோக்களும், பவுண்ஸ்களும்தான். அவர்களுக்கு வழங்கும் முக்கியத்துவத்தை, இலங்கையில் வாழும் எழுத்தாளர்களுக்கு தமிழக வெளியீட்டாளர்கள் வழங்காததுக்கு அதுதான் காரணம்.

இப்படி சில தமிழக எழுத்தாளர்கள், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களையும், அவர்களது தமிழையும் இரண்டாந்தரமாக நோக்கினாலும், தமிழகத்தின் மிகவும் பிரபலமான எழுத்தாளர்கள் சிலர் இலங்கைத் தமிழின் சிறப்பைச் சிலாகிக்கவும் தவறவில்லை. குறிப்பாக பிரபல எழுத்தாளர் 'கல்கி' கிருஸ்ணமூர்த்தி அவர்கள், தமது இலங்கைப் பயணம் சம்பந்தமான ஒரு நூலில் ஓரிடத்தில், 'யாழ்ப்பாணத் தமிழர்களின் வாய் செந்தமிழைப் பேசிக் கொண்டிருக்கும் அல்லது வெற்றிலையை மென்று கொண்டிருக்கும்' எனக் குறிப்பிடுகிறார். இதேபோல, இலங்கை வானொலியின் தமிழ் உச்சரிப்பை, இந்திய தமிழ் வானொலியின் உச்சரிப்புடன் ஒப்பிட்டு, இலங்கை வானொலியின் தமிழ் உச்சரிப்பை புகழ்ந்தவர்களும் உண்டு. அதுமாத்திரமின்றி, இலங்கைத் தமிழ் அறிஞர்களான ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, தனிநாயகம் அடிகளார், க.கைலாசபதி போன்றோர் தமிழ்மொழியின் பன்முக வளர்ச்சிக்கு ஆற்றிய பாரிய பங்களிப்புகளை பல தமிழக அறிஞர்கள் போற்றியுமுள்ளனர்.

ஆனால் காலத்துக்காலம் சில தமிழக சில்லறைகள் செய்யும் இந்த வகையான சில்மிசங்களால், அவர்களது மனதில் ஆழமாக வேரூன்றியுள்ள 'பெரியண்ணன்' சிந்தனை வெளிவந்து கொண்டே இருக்கின்றது. *